மன்றம்

இரா. நெடுஞ்செழியன். எம். ஏ.

மலர் 3 | 1 - 1 - 55 | இதழ் 17



பாழ்பட்ட பழைய மதக் கொள்கைகளை ஏற்க மறுத்துப், பகுத்தறிவு வழியில் சிந்தனையைச் செலுத்தி, எதிர்ப்புக்கு வளையாமல், ஏளனத்துக்கு அஞ்சாமல் உண்மைக்குப் பரிந்து பேசி, உயரிய கருத்துக்களை உலகுக்கு

ஈந்த பேரறிவாளர்

பரூக் பினேசா

உள்நாடு அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளிநாடு அணா 5



புகையிலை நறுக்கும் கத்தரிக்கோல்!

1948-ஆம் ஆண்டில் பெரியார் பிறந்த நாள் விழாப் பொக்கூட்டம் ஒன்று, சென்னை பெரம்பூர் புகை வண்டி நிலையத்திற்கு எதிரிலுள்ள மைதானத்தில் கூட்டப்பட்டது. அந்த விழாப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அறிஞர் அண்ணா அவர்கள் அழைக்கப் பட்டிருந்தார்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் அன்று பகற்பொழுதில் தோழர் க. அன்பழகன் அவர்கள் வீட்டில் தங்கியிருந்தார்கள். ஓய்வான நேரத்தில் 'சேப்டி ரேசர்' மூலம் முகச்சவரம் செய்து கொண்டார்கள். மீசையைச் செம்மைப்படுத்தவேண்டி தோழர் அன்பழகனிடம் கத்தரிக்கோல் ஒன்று கேட்டார்கள். தோழர் அன்பழகன் அவர்கள் பெரியதொரு கத்தரிக்கோலைக் கொண்டு வந்து கொடுத்தார். அந்தக் கத்தரிக்கோல் மீசையைச் செம்மைப்படுத்துவதற்குப் பதிலாகச் சீர்குலைத்துவிட்டது. இறுதியில் மீசை முழுவதுமே எடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. எப்பொழுதும் மீசையோடு காட்சியளித்துவந்த அண்ணா அவர்கள் அன்று பொதுக்கூட்டத்தில் மீசையில்லாமல் காட்சியளிக்க வேண்டியிருந்தது.

அந்த நேரம் அறிஞர் அண்ணா அவர்கள் இயக்க நடவடிக்கைகளில் மிகவாகத் தொடர்புகொள்ளாமல் ஒதுங்கியிருந்த நேரமாகும். தாம் மீசையில்லாமலிருப்பதைத் தமது அரசியல் போக்கோடு சிலர் தொடர்புபடுத்திப் பார்க்கக்கூடும் என்பதை உணர்ந்த அறிஞர் அண்ணா அவர்கள், பொதுக்கூட்டத்தில் பேசிக்கொண்டிருக்கும்போதே ஏற்ற ஒரு இடத்தில் அதனை வெளிப்படுத்திவிட்டார்கள். "இன்று எனக்கு மீசையில்லாமலிருப்பதைக் கண்ட சிலர், இது என்ன புதுமையாக இருக்கிறதே என்று வியப்படைகிறார்கள்; வேறு சிலர் இதற்கு ஏதேனும் அரசியல் காரணம் இருக்கவேண்டுமென்று ஐயப்படுகிறார்கள். இதற்கு ஒரு காரணமும் இல்லை. தோழர் அன்பழகன் அவர்கள் வீட்டில் நான் முகச்சவரம் செய்துகொண்டேன். மீசை நறுக்குவதற்காகத் தோழர் அன்பழகன் அவர்களைக் கத்தரிக்கோல் கேட்டேன். அவர் **புகையிலை நறுக்கும் கத்தரிக்கோல்** ஒன்றினைக் கொண்டுவந்து கொடுத்தார். அதன் விளைவால் என் மீசை முழுவதும் எடுக்கவேண்டியதாயிற்று. அவ்வளவுதான்!" என்னும் கருத்துப்பட கூறினார்கள். கூடியிருந்த மக்கள் கொல்லென்று சிரித்துச் சிரிப்பொலி கிளப்பினர்.

மன்றம்
இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

1 - 1 - 55 சனிக்கிழமை

கைத்தறி ஆடைகளைப் போற்றுக!

பொங்கற் புதுநாள் சனவரித் திங்கள் 14-ம் நாள் வருகிறது. வழக்கம்போல் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள், பொங்கற் புதுநாளில் உடுத்திக்கொள்வதற்கான புது ஆடைகளைக் கைத்தறித் துணிகளாகவே வாங்கியும், பிறரை வாங்கச்செய்தும் கடமையாற்றுவதன் மூலம் கைத்தறி நெசவாளர்கள் இல்லங்களில் பொங்கலையும், அவர்கள் உள்ளங்களில் மகிழ்ச்சியையும் பொங்கச்செய்வார்கள் என்று உறுதிகொள்கிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் சென்ற சில ஆண்டுகளாகக் கைத்தறித் துணிகளை ஆதரிக்கவேண்டியதன் இன்றியமையாமையைப்பற்றிப் பொதுமக்களுக்கு, ஓயாமல் பொதுக்கூட்டங்களிலும் ஏடுகளிலும் விளக்கிக் காட்டிவந்த காரணத்தாலும், கைத்தறி நெசவாளர் போராட்டங்கள் மூலம் ஆங்காங்கு உணர்த்திவந்த காரணத்தாலும், ஊர்தோறும் தெருக்களிலே கைத்தறியாளர் ஆதரவுநாளில் கைத்தறித் துணி மூட்டைகளைச் சுமந்து விற்றுவந்த காரணத்தாலும் கைத்தறித் துணிகளுக்கு ஒரு செல்வாக்கும் ஆதரவும் தமிழ்நாட்டில் ஏற்பட்டன என்னலாம். இவையெல்லாம் ஓரளவுக்குக் கைத்தறியாளர்களின் துயரைப் போக்கின என்றாலும், துடைக்கப்படவேண்டிய துயரின் அளவு இன்னமும் ஏராளம் இருந்துகொண்டேயிருக்கிறது. கைத்தறியாளர்களின் கண்ணீரைத் துடைக்க இந்தியப் பேரரசு இறுதிவரையில் மறுத்துவிட்டது. சென்னை அரசியலின் எல்லாக் கட்சிகளின் ஒருமனதான கோரிக்கையும் இந்தியப் பேரரசால் மறுக்கப்பட்டுவிட்டது. திராவிடநாடு திராவிடர்க்கு ஆனாலொழிய தென்னாட்டு நெசவாளர்களின் துயர் அவ்வளவு எளிதாகத் துடைப்பதற்கான வழி கிடைக்காது என்பதை இன்றைய அரசியல் சூழ்நிலை தெளிவாக்கிவிட்டது. எனவேதான் திராவிட முன்னேற்றக் கழகத்தார் தங்களால் இயன்ற உதவிகளைக் கைத்தறியாளர்க்குச் செய்யவேண்டிய இன்றியமையாத நிலையிலிருக்கிறார்கள்.

கழகம் கைத்தறித்துணியை ஆதரிப்பதை ஒரு கொள்கையாகக் கொள்ளவில்லை; அதனை ஒரு அவசியமாகக் கொண்டிருக்கிறது. தொடர்ந்து வருங்காலமெல்லாம் கைத்தறி வாழவேண்டும் என்பதல்ல கழகத்தின் கொள்கை; எல்லாம் பொறித்தொழில் சார்பினவாக ஆகும் காலம் ஒன்று வருமேயானால், அந்தக் காலத்தைக் கழகம் போற்றி வரவேற்றே தீரும். ஆனால் இன்றைய நிலையில் கைத்தறித் துணிகளை ஆதரிப்பதற்குக் காரணம், கைத்தறித் தொழிலை நம்பி வாழ்வை அமைத்துக்கொண்டவர்கள் தென்னாட்டைப் பொறுத்தவரையில் முப்பது இலட்சத்துக்கு மேற்பட்டவர்களாக இருந்துவருகிறார்கள். அவர்கள் வாழ்நாள் சென்று முடியும் காலம் வரையில் அல்லது அவர்கள் போதுமான வருவாய் தரும் வேறு தொழில்களில் நுழையும் காலம் வரையில் அவர்களைக் காப்பாற்றித் தீரவேண்டிய கடப்பாடு ஏற்பட்டிருக்கிறது. கைத்தறியாளர்கள் கைத்தறித் தொழிலைத் தம் வருங்காலத் தலைமுறையினர்க்கும் வாழ்க்கைத்தொழிலாக ஆக்கிவிடாமல், அவர்களை வருவாய் தரும் வளரும் பிற தொழில்களில் இப்பொழுதே ஈடுபடுத்த முயன்றால்தான், கைத்தறியாளர் சமூகத்தைக் காப்பாற்றியவர்கள் ஆவார்கள். சலுகைகளை எதிர்பார்த்துக் கைத்தறித் தொழில் நீண்டநாட்கள் வாழ முடியாது என்பதுமட்டும் உறுதி.

சென்ற ஆண்டு—அதற்கு முந்திய ஆண்டு போலவே திராவிடமெங்கும் இருக்கும் திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகள் கைத்தறித் துணி ஆதரவு வாரத்தைச் சிறப்புற கொண்டாடுமாக!

கைத்தறியாளர்க்கு வாழ்வு அளிக்கவேண்டியது உடனடித் திட்டமாக இருப்பதால் குறிப்பாகத் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களும், பொதுவாகப் பொதுமக்களும் வருகின்ற பொங்கற் புதுநாளைப் பொறுத்து, கைத்தறித் துணிகளையே வாங்குமாறு வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறோம். நாட்டின் நிலைமைக்கேற்ப, காலத்தின் போக்கை ஒட்டி, **கைத்தறி ஆடைகளைப் போற்றுக!**

கருத்துக் கதிர்

இந்தி தேசிய மொழியா?

இந்தியத் துணைக்கண்டத்தில் இந்தியை அரசியல் மொழியாகவும், பொதுமொழியாகவும் ஆக்க முயலுவதோடு அதனைத் தேசிய மொழியாகவும் ஆக்கிவிட முயலுகின்றனர் இந்திமொழிப் பரப்புவோர். இந்தியை இந்திய துணைக்கண்டத்தின் தேசிய மொழி ஆக்குகிறார்கள் என்றால், அவர்கள் பிற தேசிய மொழிகளை அழிக்கப்போகிறார்கள் என்றுதானே பொருள்! ஒரு நாட்டிற்கு அரசியல் மொழி—பொதுமொழி—பாடமொழி போன்றவைகள் வேண்டுமானால் பலவாக இருப்பதில் பொருளிருக்கக்கூடும். ஆனால் ஒரு நாட்டிற்கு இரண்டு தேசிய மொழிகள் இருக்கும் என்று எண்ணுவதே அறியாமை யல்லவா? பின்னர் தேசியம் என்பதற்கு என்னதான் அத்தகையோர் பொருள்கொள்கிறார்களோ, தெரியவில்லை! தமிழகத்தைப் பொறுத்தவரையில் தமிழும், இந்தியும் ஆகிய இரண்டும் எப்படித் தேசிய மொழிகளாக இருக்கக்கூடும்? தமிழ் ஒன்றுதானே தேசிய மொழியாக இருக்கக்கூடும்; இந்தி எப்படித் தேசிய மொழியாகும்? ஆங்கிலம் இந்தியத் துணைக்கண்டத்தின் அரசியல் மொழியாகவும், பொதுமொழியாகவும் இருந்த காரணத்தால், அது தேசிய மொழி ஆகிவிடுமா?—அப்பொழுதெல்லாம் ஆக்கப்பட்டிருந்ததா? இல்லையே! அதுபோல இப்பொழுது வடவர் ஆதிக்க ஆட்சியின் காரணமாக இந்தி மொழி இந்தியத் துணைக்கண்டத்தின் அரசியல் மொழியாகவும் பொதுமொழியாகவும் அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது குறித்து இந்திமொழி (இந்திமொழியைத் தாய்மொழியாகக் கொண்ட இடத்திற்கு மட்டுமல்லாமல்) பிற இடங்களுக்கும் தேசிய மொழி ஆகிவிடுமா? அல்லது அதனை ஆக்கிவிடத்தான் முடியுமா? அல்லது அந்தக் கூற்று பொருத்தமுடையதுதானாகுமா?

திராவிட நாட்டைப் பொறுத்தவரையில்—தமிழகத்தைப் பொறுத்தவரையில் இந்தி தேசிய மொழி ஆகாது; அது அரசியல் மொழியாகவோ அல்லது பொது மொழியாகவோ இருக்கவேண்டிய இன்றியமையாமையும் ஏதுங் கிடையாது. திராவிட நாட்டைப் பொறுத்தவரையில் அந்தந்த பகுதிக்குரிய தாய்மொழிகளே அந்தந்தப் பகுதிக்குரிய தேசியமொழியாகவும் அரசியல் மொழியாகவும் இயங்கும்; உலகப்பொதுமொழியாகிய ஆங்கிலத்தை உலகத்துக்கும், இந்தியத் துணைக்கண்டத்துக்கும், திராவிடத்துக்கும் பொது மொழியாகக் கொள்ளலாம்! எந்தவிதத்தில் வைத்துப் பார்த்தாலும் இந்தி தென்னாட்டிற்குத் தேவையற்ற ஒரு மொழியே! இந்த உண்மையைத் திராவிட நாட்டு மக்கள் உணர்ந்தால்தான், இந்தி மொழி ஆதிக்கத்திற்குத் திராவிடம் இரையாகாமலிருக்கும்.

○ ○ ○

வடவர் ஆதிக்கத்துக்கு அடிபணிவதா?

இப்படிப்பட்டவொரு கருத்தை எழுப்பியவர் திராவிட இயக்கத்தைச் சேர்ந்த ஒருவர் அல்லர்; பொதுவுடைமைத் தோழர்களுக்கு எப்பொழுதும் ஆதரவு நல்கிக்கொண்டிருக்கும் முதுபெருந் தலைவரான தோழர் வி. சக்கரைச் செட்டியார் அவர்கள் ஆவார்கள். 21-12-54-ம் நாள் சென்னை மேல் சட்டமன்றக் கூட்டத்தில் தோழர் வி. சக்கரைச்செட்டியார் அவர்கள், இந்தியக் குடியரசுச் சட்டப் பிரிவின் திருத்தம் ஒன்றின்மீது எழுந்த விவாதத்தின்போது, வடநாட்டின் ஆதிக்கம் கூடாது என்றும், மத்திய அரசாங்கத்திடம் சென்னை அரசாங்கத்துக்குச் செல்வாக்கு எதுவும் கிடையாது என்றும், ஆதலின் மாநில அரசாங்கம் தனக்குள்ள உரிமைகளை மத்திய அரசாங்கத்துக்குக் கொடுக்கக்கூடாது என்றும், மத்திய அரசாங்கம் வடநாட்டுக் காங்கிரஸ் கட்சியின் ஆதிக்கத்தில் இருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். தோழர் சக்கரைச் செட்டியாரின் இந்த அரிய கூற்றுக்கள் சென்னை அரசியலார்க்குத் தெளிவை உண்டாக்காவிட்டாலும், திராவிடத்திலுள்ள கம்யூனிஸ்ட்டுத் தோழர்களுக்குத் தெளிவையுண்டாக்குமேயானால் அதுவகையில் நாம் பூரிப்பும் பெருமிதமும் கொள்வோம்! ஆனால் அவர்கள் தெளிவு பெறுவார்களா அல்லது தெளிவுபெற முயற்சிப்பார்களா என்பதுதான் ஐயப்பாடு!

○ ○ ○

பக்தித் துவக்கம்

பாழாய் முடிந்தது!

'ஆண்டவன் அருளு'ம், 'பக்தியின் சிறப்பு'ம் ஒருங்கே வாய்க்கப்பட்ட அன்பர் சக்ரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் அவர்கள், கவர்னர் செனரலாக இருக்கும் போது, தூத்துக்குடித் துறைமுகத்தில், தேங்காய் உடைத்து, சூடம் கொளுத்தி, தூபதீப நைவேத்தியங்காட்டி, வேத மந்திரங்கள் ஓதி "வ. உ. சி" என்ற கப்பலைக் கடலில் மிதக்கவிட்டார்! அந்தக் கப்பலை வாங்குவதற்காக அதனை உரிமையாகக்கொண்ட கம்பெனிக்கு அரசியலார் ரூ. 5,33,500 கடன் கொடுத்தார்கள். ஏழு ஆண்டு தவணைகளில் அந்தத் தொகையைக் கம்பெனியார் திருப்பித் தந்துவிடவேண்டுமென்பது நிபந்தனை, ஆனால் அந்தக் கம்பெனி ஒரு ஆண்டு தவணை வட்டியைத்தான் அரசுக்குக் கொடுத்திருக்கிறதாம்.

"வ. உ. சி." கப்பல் மிதக்கவிட்ட காலத்திலிருந்து அது பல்வேறு வகை பழுதுகளுக்கு உள்ளாகி, சீர்கெட்டு, கம்பெனிக்குப் பெருத்த நட்டம் உண்டாக்கும் ஒன்றாக ஆயிற்றாம். அதனால் அதனை அண்மையில் ரூ. 1,15,000 வுக்கு அந்தக் கம்பெனியார் விற்றுவிட்டார்களாம். அன்பர் ஆச்சாரியார் 'பக்தி'யோடு துவக்கிய செயல் ஏனோ பாழான நிலையை வந்தடைந்துவிட்டது! அன்பர் ஆச்சாரியார் பரப்பும் 'பக்தி' எந்த அளவு சாதனையைப் புரிந்துவருகிறது என்பதற்கு இஃதொன்றே குன்றின்மேலிட்ட விளக்காகும்!

O O O

கருத்தடைக்குப்

பாதிரியார் ஆதரவு

கிருத்தவப் பாதிரிமார்கள் எல்லோரும் கருத்தடை செய்வது பாபகாரியம் என்று சொல்லி, அதனை முழுமூச்சாக எதிர்த்து வந்தனர்; இப்பொழுதும் எதிர்த்துவருகின்றனர். 'உலகம் உருண்டை' என்று சொல்லுவதை எப்படி ஒரு காலத்தில் பாபகாரியம் என்று கருதி, அந்தக் கருத்தை எதிர்த்துப், பிறகு காலப்போக்கில் வேறுவழியின்றி 'உலகம் உருண்டைதான்' என்ற கொள்கையை ஒப்புக்கொள்ள பாதிரிமார்கள் முன்வந்தார்களோ, அதுபோல கருத்தடையின் அவசியத்தை அவர்கள் உணரும் காலம் வரும் என்ற அறிகுறி இப்பொழுதே தென்படத் துவங்கிவிட்டது. இங்கிலாந்தில் சடுசெக்ஸ் செயின்ட் சாண் சர்ச்சின் விகாரான டாக்டர் சன் கிளேர் ச்நோ என்ற பாதிரியார் "கருத்தடை பாபமல்லை. குடும்பத்தை அதிகமாகப் பெருகவிடாமல் கட்டுப்படுத்துவது என்பது உலகம் எங்கும் பின்பற்றப்படவேண்டும். ஒரு குடும்பத்துக்கு நான்கு குழந்தைகள் இருப்பதே போதுமானது" என்று கூறியுள்ளார். இவரைப் பின்பற்றிப் பல பாதிரியார்கள் தோன்றக்கூடும் என்பதில் வியப்பொன்றுமில்லை. எந்தவிதத்திலும் கட்டுப்படுத்தக்கூடாது, 'ஆண்டவன் விட்ட வழிக்கே விடவேண்டும், என்றுசொல்லும் நிலையில் மதவாதிகள் எவ்வளவு நாட்களுக்குத்தான் கூறிக்கொண்டிருக்கமுடியும்?

O O O

திராவிட இன ஒற்றுமை

மலையாளம், தமிழ், கன்னடம், தெலுங்கு ஆகிய நான்கு திராவிட மொழிகளின் வளர்ச்சியைக் கவனித்து வேண்டுவன செய்ய "தென்னிந்திய இலக்கிய வளர்ச்சிக் கழகம் (அகடமி)" ஒன்று நிறுவப்படவேண்டும் என்ற முடிவை, அண்மையில், திருவனந்தபுரத்தில் கூடிய கேரள சாகித்ய பரிடத்தின் 24-வது ஆண்டு மாநாடு எடுத்துள்ளது. இதுபோற்றி வரவேற்கப்படவேண்டியதொரு முடிவாகும். திராவிட முன்னேற்றக்கழகம் எந்த நான்கு மொழியும்—வட்டாரங்களுக்கும் இன அடிப்படையில் கூட்டுச் சேரவேண்டும் என்று கருதுகிறதோ, அந்த நான்கு மொழிகளும் கூட்டுக்கழகம் ஒன்றில் இணையும்படியான முடிவு திராவிடப் பிரிவினைக் கொள்கைக்கு நல்ல ஊட்டம் கொடுப்பதாகும். 'தென்னிந்திய இலக்கிய வளர்ச்சிக் கழகம்' ஒன்று அமைவதை, அந்த மாநாட்டிலேயே கலந்துகொண்டு சொற்பொழிவாற்றிய "தினமணி" துணையாசிரியர் தோழர் ஏ. ஜி. வெங்கடாச்சாரியார் ஆதரித்திருப்பது வியப்புக்குரியதுதான் என்றாலும், வரவேற்கத்தக்கதாகும். திராவிட இன ஒற்றுமைக்கான நிலைமைகள் நாளுக்குநாள் வளரும் என்பதற்கு இது ஒரு அறிகுறியாகும்!

'மன்றம்' சந்தா விபரம்

	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	6—0—0	7—8—0
ஆறு திங்கள் ,,	3—0—0	
தனி இதழ் ,,	0—4—0	0—5—0

அண்டசராசரம் - 13

[இரா. செழியன்]

[இந்து மதத்தின் வேத, புராணங்களின்படி, அண்டசராசரங்களையெல்லாம் பிரமதேவன் படைத்தான். இவ்வளவு பெரிய பிரமாண்ட படைப்புக்கு ஆதாரமாக—அஸ்திவாரமாக ஒரு ஆமை வைக்கப்பட்டது. ஆமை முதுகின்மேல் அஷ்டதிக்கு யானைகளும், ஆயிரந்தலை ஆதிசேடனும் இருக்கின்றன. அவைகளுக்குமேல் ருத்ரர்கள் வசிக்கும் ருத்ரபுவனம் இருக்கிறது. ருத்ரபுவனத்துக்குமேல் புகைமண்டலம். புகைமண்டலத்துக்குமேல் வெட்டவெளி. அவற்றுக்குமேல் யமபட்டணங்களும், அதையடுத்து 28 கோடிநரகங்களும் நிற்கின்றன. நரகலோகத்தின்மேல் கூஷ்மாண்டபுவனம் அதற்குமேல் ஏழு பாதாளங்கள், அதையடுத்து ஆடகேசுரபுவனம், அதையும் கடந்தால் பூலோகம். பூலோகத்திற்கு உயரே புவலோகம் ஆரம்பிக்கிறது. புவலோகத்தில் மேகமண்டலங்களும், வீரசுவர்க்கமும், காந்தருவர் வித்தியாதரர்களும், கருடன், ஐராவதம் போன்றவைகளும் உள்ளன. புவலோகத்துக்கு மேல் சூரியலோகம். சூரியலோகத்துக்கு அப்பால் சந்திரலோகம். சந்திரலோகத்துக்கு மேல்நோக்கி, அடுத்தடுத்து முறையே, நட்சத்திரமண்டலம், செவ்வாய் மண்டலம், புதன் மண்டலம், பிரகஸ்பதி மண்டலம், சுக்கிரமண்டலம், சனிமண்டலம் முதலியன இருக்கின்றன. சனிமண்டலத்தில், சனிபகவானைத் தவிர, இராகு கேதுக்கள் இருக்கின்றன. அதற்கு மேலுள்ள சப்தரிஷி மண்டலத்தில், அத்திரி, வசிட்டர் முதலான ஏழு ரிஷிசிரேஷ்டர்கள் இருக்கின்றனர். சப்தரிஷி மண்டலத்திற்குமேல் சிஞ்சுமாரம் என்ற காலச்சக்கிரம் இருக்கிறது. அதற்குமேல் இந்திரலோகம் இருக்கிறது......]

இந்திரன் தனது பதவியைக் காப்பாற்றிக் கொள்ள கீழ்த்தரமான செயல்களுக்குத் தாழ்த்திக்கொண்டிருக்கிறான். கொலை, களவு, எதுவும் அவனுக்குப் புறம்பானதாகப் பட்டதில்லை. எதிரிகளை வீழ்த்த நடன மாதரை அனுப்புவது அன்றாடச் செயல். நடனமாதரால் முடியாத இடத்தில், தனது சொந்த மகளையே சோரம்போகச்சொல்லுதலும் அவனால் செய்யப்பட்டிருக்கிறது. பதவிப் பித்தம், அதே சமயத்தில் பதவியைக் காப்பாற்றிக் கொள்ளத் தெரியாத பலவீனம், உயர்ந்த பதவிக்கு உரியவல்லா தாழ்ந்த நடவடிக்கைகள் எல்லாம் இந்திரனிடம் இருந்திருக்கின்றன, புராணங்கள் கூறும் கதைகளின்படி.

பதவியைக் காப்பாற்றிக்கொள்ள, தனது மகள் சயந்தியை எதிரிகளின் குருவிடம் அனுப்பிவிட்ட கதையை முன்பு பார்த்தோம். இப்பொழுது மற்றொரு கதையை—பதவியைக் காப்பாற்றிக்கொள்ள இந்திரன் எடுத்துக் கொள்ளும் நடவடிக்கைகளில் ஒன்றைக் கவனிக்கலாம்.

காசிபர் சப்தரிஷிகளில் ஒருவரென்பது முன்பே கூறப்பட்டுள்ளது. முற்றும் துறந்து ரிஷிசிரேஷ்டரான அவருக்கு மனைவிகள் மட்டும் பதின்மூன்றுபேர்கள் இருந்தனர், அவர்களில் திதி என்பவளும் ஒருத்தி.

பாற்கடலில் தேவர்களும் அசுரர்களும் அமுதம் கடைந்தெடுத்தபொழுது, திதியின் குமாரர்கள் அசுரர் பக்கம் நின்று கடைந்தனர். கடைசியில் அமுதம் வெளிவந்ததும் தேவர்களும் திருமாலும், அரக்கர்களை வஞ்சித்து அவர்களுக்குரிய பங்கைக் கொடுக்காததுடன், பின்பு நிகழ்ந்த பூசலில் அரக்கரில் பலரைக் கொன்றும்விட்டனர். அமிர்தபானம் பெற வந்தவர்கள் இரத்தபானம் பெற்றனர். தேவர்களின் வஞ்சத்தால் கொலையுண்டவர்களில் திதியின் குமாரர்களும் இருந்தனர்.

தனது குமாரர்கள் தேவர்களால் மாய்க்கப்பட்டதறிந்த திதி, பெருந் துயரமும் கடுங் கோபமும் கொண்டாள். இந்திரனை வென்று தேவர்களைப் பழிக்குப் பழிவாங்கத் தக்க வலிமைபடைத்த மகனைப் பெற்றெடுக்க உறுதிபூண்டாள். தனது கணவனை வணங்கி, “எனது மக்கள் இந்திரன் முதலானோர் செய்த வஞ்சத்தால் இறந்தனர்; அத்தேவர்களை அழிப்பதற்கு எனக்கு ஒரு மகனை அருள

வேண்டும்'' என்று வேண்டிக்கொண்டாளாம். அதாவது மனைவி தன் கணவனிடம் பிள்ளை வரம் வேண்டினுள். நியாயமான, உரிமை யுடைய வரந்தான்!

தனது மனைவி புத்திரப்பேறு கேட்டதும் காசிபர் தயங்கவில்லை. அவர் ரிஷி சிரேஷ்டர், வரந்தரும் தவமுனிவர்; கேட்டவுடன் அருள் புரிந்து "எனது பத்தினியே! உனக்கு மகவு அளித்தனம்! இனி நீ பூலோகம்போய் ஓராயிரம் ஆண்டுகள் தவம் செய்தால் உனக்கு இந்திரனைக்கொல்லும் மகன் தோன்றுவான்!'' என்று வரந்தந்தார்.

கர்ப்பம்! அதை ஓராயிரம் ஆண்டுகள் தாங்க வேண்டும், பின் வலிமையுள்ள மகன் பிறப்பான்! வேடிக்கையானது, ஆனுல் தேவர்களின் கதைகளில் இது சாதாரணம்!

காசிபரின் ஏவலின்படி, திதி பூமிக்கு இறங்கி வந்து, குசலப்லவம் என்ற இடத்தில் கடுந் தவம் செய்துகொண்டிருந்தாள்.

தங்களுக்கு எதிராக ஒரு பெண் சென்று தவஞ் செய்கிருளாம் என்று முதலில் கேலி செய்தார்கள். அதுவும் ஆயிரம் ஆண்டுகள்! ஆகக்கூடிய காரியமா என்று இந்திரன் அலட்சியப்படுத்தினுன்.

திதியின் தவவலிமை ஆண்டுக்கு ஆண்டு வளர்ந்தபடி இருந்தது. நூருண்டு, இருநூறு, நாநூறு, எழுநூறு கழிந்தபடி இருந்தன. திதியின் உறுதியைப் பார்த்தால், காசிபர் குறித்த ஆயிரம் ஆண்டுகளையும் தவத்திற்கழித்து தேவர்களை அழிக்கத்தக்க மகனைப் பெற்று விடுவாள் போலத்தோன்றியது.

திதி தவஞ்செய்யத்தொடங்கி, தொள்ளாயிரம் ஆண்டுகளும் கடந்துவிட்டன. தேவர்களின் கேலிப் பேச்சுகள் மறைந்துவிட்டன. திதி என்ற பேரை நினைத்தாலே, அவர்கள் மனதில் திகில் தோன்றியது. கேலி செய்தவர்கள், இப்பொழுது கிலி கொண்டு, ஒருவரையொருவர் மிரட்சியுடன் பார்த்துக்கொண்டனர். இந்திரனுக்கு மனக்கவலை அதிகரித்தது. பழையபடி தேவர்களுக்கு ஆபத்து, இந்திர பதவிக்கு ஆபத்து! திதி எடுத்திருக்கிற சபதம், தேவர்களை வெல்வது மட்டுமல்ல, இந்திரனைக் கொன்றுவிடவும் வேண்டும். "ஐயோ!'' என்று இந்திரன் தன் தலையைப் பிடித்துக்கொண்டான்.

"இதற்கு என்ன செய்வது?'' வழக்கம் போல் தேவர்கள் கேட்டுக்கொண்டனர்; கடைசியாக இந்திரனைக் கேட்டனர். வழக்கம்போல் இந்திரனும் தனது குரு பிரகஸ்பதியைக் கேட்டான். கூடியிருந்த மற்ற தேவரிஷிகளைக் கேட்டான். ஒரு பெண் தவஞ் செய்கிருள், அதை எதிர்க்கத் திறனின்றி தேவர்களும், இந்திரனும், தேவரிஷிகளும் திண்டாடினுர்கள்.

ஒரு பெண் தவஞ்செய்கிருள், அதைப்போல தேவகுமாரிகள் யாராவது முன்வந்தார்களா? கிடையாது. அவர்களுடைய தவமெல்லாம் பஞ்சணையில் எவனை வீழ்த்துவது, பஞ்ச பாணனை எவ்வாறு வெல்வது, சோமரசம் பருகலாமா, சொர்ணபஸ்பம் சாப்பிடலாமா இப்படிப் போய்க்கொண்டிருந்தது. பஞ்சணையில் தேர்ச்சிபெற்றவர்கள், பர்ணசாலையை அறியாதவர்கள், ஆடையணிகள் அங்க அழகை வெளிக்காட்ட காமக்கோலங்கொண்டு ஆடிடத் தெரியுமேயன்றித், தவக்கோலம் பூண்டு அமர்ந்திடத் தெரியாதவர்கள்!

திதியின் தவம் வளர்ந்துகொண்டிருந்தது, கடைசி நூருண்டிலும் பத்து இருபது, முப்பது என்று ஆண்டுகள் கழிந்துகொண்டிருந்தன. இந்திரனுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை, இந்திரபதவி ஆட்டங்கொடுத்தது.

முனிவர்கள், அசுரர்கள், அசுரர்களின் குரு இவர்கள் அகோரத் தவம் செய்து இந்திரப் பதவிக்கு ஆபத்து உண்டாக்க முயன்ருல், இந்திரன் வழக்கமாக செயவது தனது நடன மாதர்களை அனுப்பிவைப்பது. திலோத்தமை, ரம்பை, மேனகை, ஊர்வசி இவர்களால் அந்த எதிரிகளை, தவஞ்செய்து தனது பதவியைப் பிடிக்க முயன்றிடும் தறுதலைகளை அடக்கி வந்தான். கடுந்தவம் புரியும் முனிபுங்கவர்களும், அந்த மோகனுங்கிகளைக் கண்டதும் தமது தவத்தை மறந்து அவர்கள் மயக்கில் வீழ்ந்துவிடுவார்கள். தவஞ்செய்பவன் விசுவாமித்திரனுயினும், வேதாந்த விசாரியாயினும், மேனகையின் ஆடலில், ஊர்வசியின் பாடலில், திலோத்தமையின் நடையழகில், ரம்பையின் இடையழகில் நிச்சயம் வீழ்ந்துவிடுவான். அந்த அப்சரசுகளின் படைவலிமையில் இந்திரனுக்கு நம்பிக்கை மிகவுண்டு. மாற்ருரின் தவம் உயர்ந்தபொழுது இந்த தேவமாதர்கள்தான் அவனைக் காப்பாற்றினுர்கள். எதிரிகள் வாள் வீச்சை வெல்லமுடியவில்லையென்ருல், வேல் வீசும் விழியினரை இந்திரன் அனுப்பிவைப்பான்.

ஆனுல் இப்பொழுது இந்திரனுக்கு எதிராகத்தவம் செய்வது திதி, ஒருபெண்! அவளுடைய தவத்தை, ஒரு பெண்ணை அனுப்பிக் கெடுக்கமுடியாது! பெண்ணின் மையலில்

ஆண் மயங்கிவிடுவதுபோல, ஆண் மையலில் பெண் மயங்கிவிடுவதில்லை !

திதியின் தவத்தை எப்படிக் கெடுப்பது என்று இந்திரனுக்குப் புரியவில்லை. அவள் தவஞ்செய்யத்தொடங்கி 990 ஆண்டுகள் கழிந்துவிட்டன. இன்னும் பத்து ஆண்டுகள் தாம் மிகுந்துள்ளவை. அதற்கப்புறம் திதியின் தவம்நிறைவேறும், சபதம் நிறைவேறும், இந்திரனையும் தேவர்களையும் அழிக்கவல்ல மகன் பிறந்துவிடுவான். இனிமேலும் வாளா விருப்பது முடியாதென, இந்திரன் கிளம்பினான். திதி தவஞ்செய்யும் காடு நோக்கி !

முன்பு அசுர குரு சுக்கிராச்சாரியாரின் தவத்தைக் கெடுக்க, இந்திரன் மகள் சயந்தி ஒரு சீடனைப்போல வேடமிட்டுச்சென்றாள். அங்கு பணிவிடை செய்துகொண்டிருந்து, பின் தக்க சமயம் நேர்ந்ததும், அசுரகுருவின் தவத்தை அழித்துவிட்டாள். அதேபோல் திதி செய்யும் தவத்தை அழிக்க, இந்திரனும் பக்திசிரத்தையுள்ள சீடனைப்போல மாறுவேடமிட்டு, திதி தவம் செய்யும் குசலப்லவம் வந்து சேர்ந்தான். தவக்கோலத்தில் இருக்கும் திதியின் காலடியில் வீழ்ந்து, தன்னை ஒரு சீடனாக ஏற்றுக்கொண்டு அருளும்படி வேண்டினான். உண்மை தெரியாத திதியும் அவனைச் சீடனாக ஏற்றுக்கொண்டாள். இந்திரன் திதிக்கு வேண்டிய பணிவிடைகளை செய்து வந்தான்.

திதி எடுத்துக்கொண்ட தவம் ஆயிரம் ஆண்டுக்காலத்துக்கு. அதில் தொள்ளாயிரத்துதொன்னூறு ஆண்டுகள் இடையூறின்றி போய்விட்டன. இன்னும் பத்து ஆண்டுகள் தாம் மிகுந்திருந்தன. அவளுடைய தவம் நிறைவேற இவ்வளவு ஆண்டுகள் அவள் தனியே இருந்த தவத்தில் அதுவரை சிறிது குறையோ, குற்றமோ ஏற்படவில்லை. வேதங்கள், ஸ்மிருதிகள் தவம் செய்பவர்கள் எப்படியிருக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறதோ, அவற்றையெல்லாம் கடைசி எழுத்து வரை திதி நிறைவேற்றி வந்தாள். நேம நிஷ்டைகள், யாகம், யோகம், தியானம், வேத பாராயணம், ஆசார அனுஷ்டானங்கள் சிறிதும் குறைவின்றி திதி செய்துவந்தாள். பரம்பரையாகத் தவஞ்செய்யும் ரிஷி சிரேஷ்டர்கள் கூட திதி செய்யும் தவத்தைக் கண்டு வியந்தனர். அதிலும் திதி கர்ப்பவதி, அந்தக் கர்ப்பத்தை ஆயிரம் ஆண்டுகள் தாங்கிக் கொண்டு, அகோரத் தவத்தையும் மேற்கொள்வதென்றால், அது சாமான்யமானதல்ல. தானெடுத்த சபதத்தை நிறைவேற்றவேண்டுமென்ற ஒரே குறிக்கோளுடன் திதி இருந்தாள்.

சீடனாக இருந்த இந்திரனுக்குத் திதியின் தவத்தை நேரில் கண்டதும் அச்சமே மிகுதியானது. அவளுடைய கண்டிப்பைப் பார்த்தால், தவத்தை நிறுத்த மும்மூர்த்திகளால் கூட முடியாதுபோலிருந்தது. தவத்தைக் கெடுப்பது என்பது இனி இயலாத காரியம் என்பது இந்திரனுக்குப் புலப்பட்டது. அவளுடைய தவத்தில், ஆசார அனுஷ்டானங்களில் ஏதாவது சிறு குறை காணப்பட்டாலும் போதும். அதை வைத்துக்கொண்டு அவளுடைய தவம் கெட்டுவிட்டது என்று வாதிடலாம் என்று இந்திரனுக்குப் பட்டது. தவத்தில் சிறு குறை—வேதம் ஓதும்பொழுது ஒரு சொல்லை விட்டாலும் போதும், அவிர்பாகம்கொடுக்கும் பொழுது யாகக்குண்டத்தை விட்டுச் சிறிது சிதறினாலும் போதும், அதைக் காட்டி திதியின் தவம் கெட்டுவிட்டது, அவளுக்கு வரம் கொடுக்கக்கூடாது என்று மும்மூர்த்திகளிடம் வாதிடலாம். அசுரர்—தேவர் போராட்டத்தில் மும்மூர்த்திகள் தேவர்பக்கம் எப்பொழுதும் இருப்பவர்களாதலால், அதில் வெற்றியும் கண்டுவிடலாம், என்ற நம்பிக்கை இந்திரனுக்கு இருந்தது. அதன்பின் திதியின் முயற்சி வீணாகிவிடும்.

இந்திரன் கூர்ந்து கவனித்த வண்ணம் இருந்தான். திதியின் ஆசார அனுஷ்டானங்களில் பிழை வருகிறதா வென்று. திதி மிகக் கடுமையானத் தவசியாக இருந்தாள், பிழையெதுவும் வைக்கவில்லை. தவஞ்செய்வோர்க்குச் சொல்லப்பட்டுள்ள குண்ட, மண்டல மந்திராதி கிரியைகள் அனைத்தும் சரிவர நடந்தன. அடிக்கடி இந்திரன் சற்று மாறுதலான காரியத்தைச் செய்யத் தூண்டுவான்.

தவசியார் தர்ப்பை கேட்டால், சீடன் கோரையைக் கொண்டுவந்து வைப்பான். மாவிலையால் நீர் தெளிக்கும்பொழுது பலா இலையைக் கட்டிவைப்பான். கும்பத்தின்மீது மஞ்சள் பூசிய தேங்காயைத் தலைகீழாக வைப்பான், யாகக்குண்டத்தின் அளவைக் கொஞ்சம் கூட்டியும் குறைத்தும் வைப்பான். ஏதாவது சிறு பிழையை திதி ஏற்றுக்கொண்டாலும் போதும், என்று இருந்தது. பின்பு தவத்தைத் தோல்வியாக்கிவிடலாம். ஆனால் அந்தப் பொல்லாத திதியோ, சிறு தவறுகூட நிகழவிடுவதில்லை. "அபசாரம்! அபசாரம்! அப்படி கூடாது சீடனே!" என்று தவற்றை விலக்கிவிடுவாள். "நான் அசடன், குருவே தெரியாமல் செய்துவிட்டேன்" என்று உள்

ஞூர நோந்துகொண்டு இந்திரன் சரியான முறையில் காரியங்களைச் செய்வான்.

ஒருநாள் நடுப்பகலில், திதி மிகவும் களைப் புற்று கண்ணயரச் சென்றாள். கர்ப்பவதி, மிகக் கடுமையான தவம், அதனால் ஏற்பட்ட சோர்வில் அவள் இளைப்பாற படுக்கையில் சிறிது நேரம் உறங்குவதுண்டு. சீடனை இந்திரன் பக்கத்தில் நின்று மயில் விசிறி கொண்டு விசிறிக்கொண்டிருப்பான். அன்று திதியிடம் சிறு தவறு நேர்ந்துவிட்டது. களைப்பு மிகுதியால் படுக்கச் சென்றவள், கால் மாட்டில் தலையைவைத்து உறங்கிவிட்டாள்!

"ஆகா! தவறு நிகழ்ந்துவிட்டது. அவளுடைய தவம் இனி பாழ்!" என்று இந்திரன் அகமகிழ்ந்தான். வடக்குப்புறம் கால்வைத்துத் தெற்குப்புறம் தலைவைத்துப் படுக்க வேண்டுமென்று ஸ்மிருதிகளில் கூறப்பட்டிருக்கிறது. இந்த ஆசாரத்தைத் தவசியான திதி மீறிவிட்டாள். இந்த "மாபெரும் தவறிற்கு" இந்திரனே தண்டனையும் கொடுக்கத் தலைப்பட்டான். மிகக் கோரமான முறையில்.

கால்மாட்டில் தலையை வைத்துத் திதி உறங்குவதைப் பார்த்ததும், அவள் ஆசாரத்தில் குறை ஏற்பட்டதை உணர்ந்த இந்திரன், மிகச் சிறிய உருவத்தை எடுத்துக்கொண்டு திதியின் கருப்பைக்குள் நுழைந்து, அங்கிருந்த சிசுவைக் கண்டதுண்டமாக வெட்டினான். சிசு துடிதுடித்தது, வேதனையால் புரண்டது, கால் வேறு, கை வேறு, தலை வேறு, முண்டம் வேறாக வெட்டப்பட்டுவிட்டது. கருப்பை இரத்தக்களரியானது, கரு சிதைந்தது. வயிற்றிலே அசைவு கண்டு திதி கண்விழித்தாள். வேதனை தாங்கமுடியாமல் அவள் துடித்தாள், அழுது புரண்டாள், புலம்பினாள். கடைசியில் கருவில் வளர்ந்த சிசு, சின்னாபின்னப்படுத்தப்பட்டு, ஏழு துண்டுகளாக வெளிவந்தன. மிகச் சிறிய உருவத்துடனிருந்த இந்திரனும் வெளிவந்தான். "தவசியாரே! தலைமாட்டில் காலை வைத்துப் படுத்தீர்கள்! மாபெரும் தவற்றை இழைத்துவிட்டீர்கள்! இந்த ஏழு துண்டுகளும், சப்த மருத்துவர்களாகச் சஞ்சரிப்பார்கள்!" என்று சொல்லிவிட்டு இந்திரன் போய்விட்டான்.

இந்திரன் எப்படி கருவை அழித்தான்? மிக நுண்ணிய உருவமெடுத்தான், கருபபைக்குள் நுழைந்தான், கருவைச் சிதைத்தான் என்று மட்டும் குறிப்பாக மேலே நாம் கூறியுள்ளோம். பிள்ளை வெளிவரும் வழியாக, இந்திரன் கருப்பைக்குள் நுழைந்திருக்கிறான். ஆபாசமான கதை, கோரமான சம்பவம், ஆனால் புராண இதிகாசங்களில் இந்திரனைப்பற்றிக் கூறப்படும் கதைகளில் இதுவும் ஒன்று.

"பக்தி மார்க்கக் கதை" "தெய்வ புருஷனைப்பற்றிய கதை, அதை மறுத்துப் பேசுவது கூடாது!", "புராதன இதிகாசம் நமது இந்திய நாகரிகச் சிலாசாசனம்" என்று எல்லோரும் ஏத்திப்பேசுகிறார்களே அந்த இராமாயணத்தில் இந்தக் கதை வருகிறது. வால்மீகி இராமாயணத்தில் மட்டுமல்ல, கம்ப இராமாயணத்திலும் இந்தக் கதை—சம்பவம் சித்தரிக்கப்பட்டுள்ளது, காவிய வண்ணத்தால்.

விசுவாமித்திரர் இராம, இலட்சுமணர்களை அழைத்துக்கொண்டு, சோணை என்னும் நதியின் கரையிலுள்ள அடர்ந்த சோலையொன்யொன்றிற்கு வந்தார். அந்த சோலையைப் பற்றிக் கூறும்பொழுது, அங்கு தவஞ்செய்த திதியின் கதை கூறப்படுகிறது. கம்பரின் காவியத்தில் அது வருகிற பாட்டைக் கவனிக்கலாம்.

> "கேட்ட வாசவ னன்னவட்
> கடிமையிற் கிடைத்து
> வாட்ட மாதவத் துணர்ந்தவள்
> வயிற்றுறு மகவை
> வீட்டியே யெழு கூறுசெய்
> திடுதலும் விம்மி
> நாட்ட நீர்தர மருத்தெனு
> நாமமு நவின்றான்."

கேட்ட - (திதி தவஞ்செய்கிறாளென்ற செய்தியைக்) கேள்வியுற்ற,

வாசவன் - இந்திரன்,

அன்னவட்கு அடிமையிற் கிடைத்து - அவளுக்கு அடிமைத்தொழில் செய்யும் வேலையில் அமர்ந்து,

மாதவத்து வாட்டம் உணர்ந்து - (அவள் செய்துவரும்) பெருந்தவத்தில் ஒரு சோர்வை அறிந்து,

அவள் வயிற்றுறு மகவை வீட்டி - (தான் நுண்ணிய உருக்கொண்டு) அவளது வயிற்றுள்ளே (சென்று அங்கு) தங்கிய கருவைப் பிளந்து,

எழு கூறு செய்திடலும் - ஏழுதுண்டுகளாக வெட்டிப்போடலும்,

விம்மி - (திதி) புலம்பி,

நாட்டம் நீர்தர - கண்களில் நீரைப்பெருக்க,

மருத்து எனும் நாமமும் நவின்றான் - (இந்திரன் அக்கண்டங்களுக்குச்) சப்த மருத்துக்கள் என்ற பெயரையும் கூறிப்போனான்.

ஆண் மயங்கிவிடுவதுபோல, ஆண் மையலில் பெண் மயங்கிவிடுவதில்லை!

திதியின் தவத்தை எப்படிக் கெடுப்பது என்று இந்திரனுக்குப் புரியவில்லை. அவள் தவஞ்செய்யத்தொடங்கி 990 ஆண்டுகள் கழிந்துவிட்டன. இன்னும் பத்து ஆண்டுகள் தாம் மிகுந்துள்ளவை. அதற்கப்புறம் திதியின் தவம்நிறைவேறும், சபதம் நிறைவேறும், இந்திரனையும் தேவர்களையும் அழிக்கவல்ல மகன் பிறந்துவிடுவான். இனிமேலும் வாளா விருப்பது முடியாதென, இந்திரன் கிளம்பினான். திதி தவஞ்செய்யும் காடு நோக்கி!

முன்பு அசுர குரு சுக்கிராச்சாரியாரின் தவத்தைக் கெடுக்க, இந்திரன் மகள் சயந்தி ஒரு சீடனைப்போல வேடமிட்டுச்சென்றாள். அங்கு பணிவிடை செய்துகொண்டிருந்து, பின் தக்க சமயம் நேர்ந்ததும், அசுரகுருவின் தவத்தை அழித்துவிட்டாள். அதேபோல் திதி செய்யும் தவத்தை அழிக்க, இந்திரனும் பக்திசிரத்தையுள்ள சீடனைப்போல மாறுவேடமிட்டு, திதி தவம் செய்யும் குசலப்லவம் வந்து சேர்ந்தான். தவக்கோலத்தில் இருக்கும் திதியின் காலடியில் வீழ்ந்து, தன்னை ஒரு சீடனாக ஏற்றுக்கொண்டு அருளும்படி வேண்டினான். உண்மை தெரியாத திதியும் அவனைச் சீடனாக ஏற்றுக்கொண்டாள். இந்திரன் திதிக்கு வேண்டிய பணிவிடைகளை செய்து வந்தான்.

திதி எடுத்துக்கொண்ட தவம் ஆயிரம் ஆண்டுக்காலத்துக்கு. அதில் தொள்ளாயிரத்துதொன்னூறு ஆண்டுகள் இடையூறின்றி போய்விட்டன. இன்னும் பத்து ஆண்டுகள் தாம் மிகுந்திருந்தன. அவளுடைய தவம் நிறைவேற இவ்வளவு ஆண்டுகள் அவள் தனியே இருந்த தவத்தில் அதுவரை சிறிது குறையோ, குற்றமோ ஏற்படவில்லை. வேதங்கள், ஸ்மிருதிகள் தவம் செய்பவர்கள் எப்படியிருக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறதோ, அவற்றையெல்லாம் கடைசி எழுத்துவரை திதி நிறைவேற்றி வந்தாள். நேம நிஷ்டைகள், யாகம், யோகம், தியானம், வேத பாராயணம், ஆசார அனுஷ்டானங்கள் சிறிதும் குறைவின்றி திதி செய்துவந்தாள். பரம்பரையாகத் தவஞ்செய்யும் ரிஷி சிரேஷ்டர்கள் கூட திதி செய்யும் தவத்தைக் கண்டு வியந்தனர். அதிலும் திதி கர்ப்பவதி, அந்தக் கர்ப்பத்தை ஆயிரம் ஆண்டுகள் தாங்கிக் கொண்டு, அகோரத் தவத்தையும் மேற்கொள் வதென்றால், அது சாமான்யமானதல்ல. தானெடுத்த சபதத்தை நிறைவேற்றவேண்டுமென்ற ஒரே குறிக்கோளுடன் திதி இருந்தாள்.

சீடனாக இருந்த இந்திரனுக்குத் திதியின் தவத்தைநேரில் கண்டதும் அச்சமே மிகுதியானது. அவளுடைய கண்டிப்பைப் பார்த்தால், தவத்தை நிறுத்த மும்மூர்த்திகளால் கூட முடியாதுபோலிருந்தது. தவத்தைக் கெடுப்பது என்பது இனி இயலாத காரியம் என்பது இந்திரனுக்குப் புலப்பட்டது. அவளுடைய தவத்தில், ஆசார அனுஷ்டானங்களில் ஏதாவது சிறு குறை காணப்பட்டாலும் போதும். அதை வைத்துக்கொண்டு அவளுடைய தவம் கெட்டுவிட்டது என்று வாதிடலாம் என்று இந்திரனுக்குப் பட்டது. தவத்தில் சிறு குறை—வேதம் ஓதும்பொழுது ஒரு சொல்லை விட்டாலும் போதும், அவிர்ப்பாகம்கொடுக்கும் பொழுது யாகக்குண்டத்தை விட்டுச் சிறிது சிதறினாலும் போதும், அதைக் காட்டி திதியின் தவம் கெட்டுவிட்டது, அவளுக்கு வரம் கொடுக்கக்கூடாது என்று மும்மூர்த்திகளிடம் வாதிடலாம். அசுரர்—தேவர் போராட்டத்தில் மும்மூர்த்திகள் தேவர்பக்கம் எப்பொழுதும் இருப்பவர்களாதலால், அதில் வெற்றியும் கண்டுவிடலாம், என்ற நம்பிக்கை இந்திரனுக்கு இருந்தது. அதன்பின் திதியின் முயற்சி வீணாகிவிடும்.

இந்திரன் கூர்ந்து கவனித்த வண்ணம் இருந்தான். திதியின் ஆசார அனுஷ்டானங்களில் பிழை வருகிறதா வென்று. திதி மிகக் கடுமையானத் தவசியாக இருந்தாள், பிழையெதுவும் வைக்கவில்லை. தவஞ்செய்வோர்க்குச் சொல்லப்பட்டுள்ள குண்ட, மண்டல மந்திராதி கிரியைகள் அனைத்தும் சரிவர நடந்தன. அடிக்கடி இந்திரன் சற்று மாறுதலான காரியத்தைச் செய்யத் தூண்டுவான்.

தவசியார் தர்ப்பை கேட்டால், சீடன் கோரையைக் கொண்டுவந்து வைப்பான். மாவிலையால் நீர் தெளிக்கும்பொழுது பலா இலையைக் கட்டிவைப்பான். கும்பத்தின்மீது மஞ்சள் பூசிய தேங்காயைத் தலைகீழாக வைப்பான், யாகக்குண்டத்தின் அளவைக் கொஞ்சம் கூட்டியும் குறைத்தும் வைப்பான். ஏதாவது சிறு பிழையை திதி ஏற்றுக்கொண்டாலும் போதும், என்று இருந்தது. பின்பு தவத்தைத் தோல்வியாக்கிவிடலாம். ஆனால் அந்தப் பொல்லாத திதியோ, சிறு தவறுகூட நிகழவிடுவதில்லை. "அபசாரம்! அபசாரம்! அப்படி கூடாது சீடனே!" என்று தவற்றை விலக்கிவிடுவாள். "நான் அசடன், குருவே தெரியாமல் செய்துவிட்டேன்" என்று உள்

ளூர நொந்துகொண்டு இந்திரன் சரியான முறையில் காரியங்களைச் செய்வான்.

ஒருநாள் நடுப்பகலில், திதி மிகவும் களைப்புற்று கண்ணயரச் சென்ருள். கர்ப்பவதி, மிகக் கடுமையான தவம், அதனுல் ஏற்பட்ட சோர்வில் அவள் இளைப்பாற படுக்கையில் சிறிது நேரம் உறங்குவதுண்டு. சீடனை இந்திரன் பக்கத்தில் நின்று மயில் விசிறி கொண்டு விசிறிக்கொண்டிருப்பான். அன்று திதியிடம் சிறு தவறு நேர்ந்துவிட்டது. களைப்பு மிகுதியால் படுக்கச் சென்றவள், கால் மாட்டில் தலையைவைத்து உறங்கிவிட்டாள்!

"ஆகா! தவறு நிகழ்ந்துவிட்டது. அவளுடைய தவம் இனி பாழ்!" என்று இந்திரன் அகமகிழ்ந்தான். வடக்குப்புறம் கால்வைத்துத் தெற்குப்புறம் தலைவைத்துப் படுக்க வேண்டுமென்று ஸ்மிருதிகளில் கூறப்பட்டிருக்கிறது. இந்த ஆசாரத்தைத் தவசியான திதி மீறிவிட்டாள். இந்த "மாபெரும் தவறிற்கு" இந்திரனே தண்டனையும் கொடுக்கத் தலைப்பட்டான். மிகக் கோரமான முறையில்.

கால்மாட்டில் தலையை வைத்துத் திதி உறங்குவதைப் பார்த்ததும், அவள் ஆசாரத்தில் குறை ஏற்பட்டதை உணர்ந்த இந்திரன், மிகச் சிறிய உருவத்தை எடுத்துக்கொண்டு திதியின் கருப்பைக்குள் நுழைந்து, அங்கிருந்த சிசுவைக் கண்டதுண்டமாக வெட்டினுன். சிசு துடிதுடித்தது, வேதனையால் புரண்டது, கால் வேறு, கை வேறு, தலை வேறு, முண்டம் வேருக வெட்டப்பட்டுவிட்டது. கருப்பை இரத்தக்களரியானது, கரு சிதைந்தது. வயிற்றிலே அசைவு கண்டு திதி கண்விழித்தாள். வேதனை தாங்கமுடியாமல் அவள் துடித்தாள், அழுது புரண்டாள், புலம்பினுள். கடைசியில் கருவில் வளர்ந்த சிசு, சின்னுபின்னப்படுத்தப்பட்டு, ஏழு துண்டுகளாக வெளிவந்தன. மிகச் சிறிய உருவத்துடனிருந்த இந்திரனும் வெளிவந்தான். "தவசியாரே! தலைமாட்டில் காலை வைத்துப் படுத்தீர்கள்! மாபெரும் தவற்றை இழைத்துவிட்டீர்கள்! இந்த ஏழு துண்டுகளும், சப்த மருத்துவர்களாகச் சஞ்சரிப்பார்கள்!" என்று சொல்லி விட்டு இந்திரன் போய்விட்டான்.

இந்திரன் எப்படி கருவை அழித்தான்? மிக நுண்ணிய உருவமெடுத்தான், கருபபைக்குள் நுழைந்தான், கருவைச் சிதைத்தான் என்று மட்டும் குறிப்பாக மேலே நாம் கூறியுள்ளோம். பிள்ளை வெளிவரும் வழியாக, இந்திரன் கருப்பைக்குள் நுழைந்திருக்கிருன். ஆபாசமான கதை, கோரமான சம்பவம், ஆனுல் புராண இதிகாசங்களில் இந்திரனைப்பற்றிக் கூறப்படும் கதைகளில் இதுவும் ஒன்று.

"பக்தி மார்க்கக் கதை" "தெய்வ புருஷனைப்பற்றிய கதை, அதை மறுத்துப் பேசுவது கூடாது!", "புராதன இதிகாசம் நமது இந்திய நாகரிகச் சிலாசாசனம்" என்று எல்லோரும் ஏத்திப்பேசுகிருர்களே அந்த இராமாயணத்தில் இந்தக் கதை வருகிறது. வால்மீகி இராமாயணத்தில் மட்டுமல்ல, கம்ப இராமாயணத்திலும் இந்தக் கதை—சம்பவம் சித்தரிக்கப்பட்டுள்ளது, காவிய வண்ணத்தால்.

விசுவாமித்திரர் இராம, இலட்சுமணர்களை அழைத்துக்கொண்டு, சோணை என்னும் நதியின் கரையிலுள்ள அடர்ந்த சோலையொன்யொன்றிற்கு வந்தார். அந்த சோலையைப் பற்றிக் கூறும்பொழுது, அங்கு தவஞ்செய்த திதியின் கதை கூறப்படுகிறது. கம்பரின் காவியத்தில் அது வருகிற பாட்டைக் கவனிக்கலாம்.

"கேட்ட வாசவ னன்னவட்
கடிமையிற் கிடைத்து
வாட்ட மாதவத் துணர்ந்தவள்
வயிற்றுறு மகவை
வீட்டியே யெழு கூறுசெய்
திடுதலும் விம்மி
நாட்ட நீர்தர மருத்தெனு
நாமமு நவின்ருன்."

கேட்ட - (திதி தவஞ்செய்கிருளென்ற செய்தியைக்) கேள்வியுற்ற,
வாசவன் - இந்திரன்,
அன்னவட்கு அடிமையிற் கிடைத்து - அவளுக்கு அடிமைத்தொழில் செய்யும் வேலையில் அமர்ந்து,
மாதவத்து வாட்டம் உணர்ந்து - (அவள் செய்துவரும்) பெருந்தவத்தில் ஒரு சோர்வை அறிந்து,
அவள் வயிற்றுறு மகவை வீட்டி - (தான் நுண்ணிய உருக்கொண்டு) அவளது வயிற்றுள்ளே (சென்று அங்கு) தங்கிய கருவைப் பிளந்து,
எழு கூறு செய்திடலும் - ஏழுதுண்டுகளாக வெட்டிப்போடலும்,
விம்மி - (திதி) புலம்பி,
நாட்டம் நீர்தர - கண்களில் நீரைப்பெருக்க,
மருத்து எனும் நாமமும் நவின்ருன் - (இந்திரன் அக்கண்டங்களுக்குச்) சப்த மருத்துக்கள் என்ற பெயரையும் கூறிப்போனுன்.

மாபாதகம்! நினைக்கவும் கூசும் செயல்! சிசுவைக் கொலைசெய்வது, அதிலும் கருவிலிருக்கும் சிசுவைக் கண்டதுண்டமாக வெட்டித்தள்ளுவது, தாயார் உறங்கும்பொழுது! 990 ஆண்டுகள் திதி ஆசார அனுஷ்டானங்களில் குறைவில்லாமல் தவம்புரிந்தாள். கடைசிப் பத்தாண்டுக்காலம். சிறு தவறு, திக்குமாறி படுத்தது! அதற்கு எவ்வளவு கோரமான தண்டனை!

எத்தகைய இழிசெயல்! அதிலும் புராணக் கதைகளின்படி பார்த்தால், காசிப முனிவருக்கு அதிதி என்ற முதல் மனைவியிடம் இந்திரன் பிறந்தவன். திதி என்பவள் காசிபருடைய இரண்டாவது மனைவி. இந்திரனுக்கு சிறிய தாய் முறைவேண்டும்! சிறிய தாயை வஞ்சித்து, அவள் உறங்கும்பொழுது கருப்பையுள் நுழைந்து, சிசு துடித்திட, அவள் வேதனையால் புலம்ப, சிசுவை ஏழு துண்டங்களுக்கு வெட்டிப்போடுமளவுக்கு இந்திரனின் இரக்கமற்ற தன்மை இருந்தது! அவன் மேலுலக அரசன், சொர்க்கலோகக் காவலன், தேவர்களுக்குத் தலைவன்! அவன் சிறிய தாயாரின் கருவை வெட்டித்தள்ளியிருக்கிறன், ஆபாசமான அருவருக்கத்தக்க முறையில்!

வேதங்களில் புகழ்ந்து பேசப்படும் இந்திரன் அவர்களது இதிகாசங்களில் இவ்வாறு சித்தரிக்கப்பட்டிருக்கிறன்! இந்திரனது செயல்—அடிமை வேலை செய்வது, பின் சமயம் நேர்ந்ததும் ஈவு இரக்கமின்றிக் கொடுமைசெய்து அழித்துவிடுவது, தனது பதவியைக் காப்பாற்றிக்கொள்ள எத்தகைய செயலுக்கும் தாழ்ந்துவிடுவது. இவை புராணக்காரர்களுக்கு வேதோத்தமர்களுக்குச் சரியென்று பட்டிருக்கலாம். வால்மீகி அந்தக் கதையைத் தனது இராமாயணத்தில் எழுதியிருக்கிருர். ஆனல் கம்பநாட்டாழ்வாரைப் புகழ்கிறவர்கள், "வால்மீகி இராமாயணத்தைக் கம்பன் தமிழ்மணங் கமழ்வதாக்கினன்!" "கோசலநாட்டில் தமிழ் நாட்டைக் கண்டான்!" "கங்கையைப் பார்க்கும்பொழுது காவிரியைப் பற்றிப் பாடினன்!" என்றெல்லாம் புகழ்கிருர்களே, அவர்கள் மேலே கண்ட பாடலுக்கு என்ன சமாதானம் சொல்லுகிருர்கள். தமிழ்நாட்டு மணம் அதில் கமழ்கிறதா, தமிழ்நாட்டுப் பண்பு, வீரம், அறம் அதில் துலங்குகிறதா? தாயின் கருவைத் தனயன் சிதைத்தான், கருப்பையில் மூடிக்கிடந்த சிசுவை, கள்ளத்தனமாகச் சென்று கண்டதுண்டமாக வெட்டினன். இதற்கு ஏன் கம்பனின் கோபம், கவியின் கண்டனம் தெரிவிக்கப்படவில்லை. எதிரியின் மனைவியைச் சிறைபிடித்த இராவணனை "இரக்கமெனும் ஒரு பொருளிலா அரக்கன்" என்று கூறிய கம்பன், சிற்றன்னையின் சிசுவை வெட்டித்தள்ளிய இந்திரனுக்கு அந்தப்பெயர்—அதனினும் கடுமையான பெயர் ஏன் தரவில்லை?

தவஞ்செய்த திதி திசைமாறிப் படுத்துறங்கியதற்காக, அவளுடைய தவவலிமை ஒடுக்கப்பட்டதுடன், கருவிலிருந்த சிசுவும் அழிக்கப்பட்டது, தொள்ளாயிரத்து தொண்ணூறு ஆண்டுகளாகச் செய்துவந்த மாபெருந்தவம், அச்சிறு தவறுக்காக தோல்வியடைந்தது. ஆனல் இந்திரன் செய்தது எவ்வளவு மாபெரும் பாதகம்! துரோக சிந்தனையுடன் சீடன்போலச் சென்றது, நுண்ணிய உருவத்துடன் கருப்பைக்குள் புகுந்து சிசுவை அறுத்துத் துண்டுகளாக்கியது; இந்த இழி செயல்களுக்கு இந்திரன் எந்தத் தண்டனையும் பெற்றதாகத் தெரியவில்லை. வஞ்சனையால், திதியின் தவத்தையும், சிசுவையும் அழித்தபின் இந்திரன் தன்னிடம் திரும்பியதாகக் கூறப்படுகிறது. இந்திரன் செய்த மிகப்பெரும் பாதகச் செயலுக்குக் கடவுள்கள் தண்டிக்கவில்லை; காவியக்காரர்களும் கண்டிக்கவில்லை. திதியின் தவம் அழிந்தது, அவளுடைய கரு ஏழு துண்டங்களாக கூறுக்கப்பட்டு, எழுவகை வாயுக்களாக உலவின. இந்திரனின் பதவி காப்பாற்றப்பட்டது.

சுக்கிராச்சாரியாரின் தவத்தைக் கலைக்க, இந்திரன் தன் மகள் சயந்தியை அனுப்பி வைத்தான். சயந்தி சீடன்போல வேடம் போட்டு, அடிமையாக இருந்து, பின் சமயம் நேர்ந்தபொழுது சுக்கிராச்சாரியாரின் தவத்தைக் கெடுத்தாள். இந்திரனும் சீடன்போல மாறுவேடம்புனைந்து, திதிக்கு அடிமைவேலை செய்து, அவளுடைய தவத்தை அழித்தான். கற்பு, கண்ணியம், ஒழுக்கம், நேர்மை, எதையும் ஈடுகொடுத்துத், தனது பதவியைக் காப்பாற்றிக்கொள்வதில் இந்திரனும், அவன் கூட்டமும் தயாராக இருந்திருக்கின்றனர்.

(தொடரும்)

தோழர்களுக்கு

15-1-55-ல் வெளிவரும் 'மன்றம்', 4-பக்கக்கள் அதிகமாக இதே விலையில் பொங்கல் இதழாக வெளிவரும். தனி மலராக வெளியிடத் தற்போது வசதியில்லை யென்பதைத் தெரிவித்துக்கொள்கிருேம்.

ஆசிரியர்,
'மன்றம்'

பனிவெளியில்

[இரா. செழியன்]

டாக்டர் சஞ்சீவி, வார்டின் வாசற்படியில் காணப்பட்டார். அவருக்குப் பின்னால் வழக்கமாக வருகிற கூட்டம்—டாக்டர்கள் சிவராமன், முத்துசாமி, சரளா, தங்கம் முதலானவர்கள் நின்றுகொண்டிருந்தனர். பரிட்சையில் தேர்வு பெற்று, பயிற்சிபெற வந்திருக்கும் புதிய டாக்டர் ஒருவர் நோயாளியின் தன்மையைப் பார்த்துக்கொண்டிருந்தார்.

“இந்தக் கேஸில் என்ன செய்வது?” என்று டாக்டர் சஞ்சீவி கேட்டார்.

புதிதாக வந்த டாக்டர் எதற்கும் கவலைப் பட்டதாகத் தெரியவில்லை. சிறிது ஞாபகப் படுத்திக்கொண்டு, தான் பாடப் புத்தகத்தில் படித்த பல மருந்துப்பெயர்களை ஒப்புவித்தான். டாக்டர் சஞ்சீவியின் முகத்தில் திருப்தி காணப்படவில்லை.

டாக்டர் தங்கத்திற்கு தான் ஆரம்பத்தில் இருந்த நிலை ஞாபகத்துக்கு வந்தது. டாக்டர் பட்டம் பெற்று, ஆஸ்பத்திரிக்குள் நுழைந்த ஆரம்பத்தில், அவளுக்கு எந்தப் பரிசீலனையும் கடினமானதாகப் பட்டதில்லை. தனக்குத் தெரிந்த ஓரிரண்டு பெயர்களுக்குள், அந்த நோயை அடக்கி அதற்கான மருந்தையும் எழுதிவிடமுடியும், மிகச் சுலபத்தில் கண்டு பிடித்துவிடக்கூடிய நோய்களை, “பெரிய டாக்டர்கள்” என்று சொல்லப்படுபவர்கள் ஏன் நீண்டநேரம் பரிசீலனை செய்து குழப்பிக் கொள்கிறார்கள் என்று புரிவதில்லை. நாளடைவில்தான், முதலில் இருந்த அவசரமும், எல்லாம் தெரியும் என்ற நம்பிக்கையும் தளர்வடைந்தன. ஒரு நோயாளியைப் பரிசீலனை செய்து, அவனைப் பற்றியுள்ள நோயை அறுதியிட்டுரைக்குமுன், அதனோடு தொடர்புடைய மற்ற நோய்களில் எவையெவை இருத்தல் கூடும் என்றும் பரிசீலனை செய்யவேண்டியிருந்தது. ஆரம்பத்தில் மிகக் கடினமானவை என்று காணப்பட்டவை சில பின் எளிதாக இருந்தன. ஆனால் முன்பு எளிதானவையாக இருந்த பல, இப்பொழுது கடினமானவையாக இருந்தன.

புதிய டாக்டர் உடனே நோயை வரையறுத்து, அதற்கு மருந்துகளை ஒப்பித்தது டாக்டர் சஞ்சீவிக்குப் பிடிக்கவில்லை. “அவைகள் மிக அருமையான மருந்துகள், நீ குறிப்பிட்ட நோயை அவைப் போக்கும். பாடப் புத்தகத்தில் நிச்சயமாக இருக்கிறது. ஆனால் அந்தத் தாளின் ஆரம்பத்தைப் பார்!” என்று படுக்கைக்கு மேல் மாட்டியிருந்த பலகையைக் காட்டினார். புதிய டாக்டர் அந்தப் பலகையை எடுத்து, அதில் அடுக்கப்பட்டிருந்த காகிதங்களைப் பார்த்தார். ஆரம்பத்தில் அந்த நோயாளி ஆஸ்பத்திரிக்கு வந்தபொழுது, இப்பொழுது புதிய டாக்டர் சொன்ன மருந்துகளையே அவர்கள் எழுதித் தந்திருக்கிறார்கள். மருந்து சாப்பிட்டதும் நோயாளி குணமடைந்திருக்கிறான். ஆனால் ஒரு வாரத்துக்கெல்லாம் அவன் மீண்டும் மருந்து புட்டியை எடுத்துக் கொண்டுவந்துவிட்டான்.

“நோயாளி வருகிறான். நாம் ஒரு மருந்தை ஊற்றிக் கொடுக்கிறோம். ஒரு வாரமோ நான்கு வாரமோ கழித்து மீண்டும் வருகிறான். வேறொரு மருந்தை ஊற்றிக்கொடுக்கிறோம், பலதடவை வந்து வந்து போகிறார்கள். கடைசியாக வருவதில்லை. இறந்துவிட்டார்கள் என்று பின்பு எப்பொழுதாவது கேள்விப்படுகிறோம். நோயாளியை வைத்துக்கொண்டு நாம் பரீட்சை செய்துகொண்டிருக்கமுடியாது. முடிவாக ஒன்றைக் கூறுவதற்குமுன், அது தவறு என்பதற்கான காரணங்களை நாமே தேடிக் கண்டுபிடித்துச் சமாதானம் செய்ய வேண்டும்” கடிகாரத்தின் முள் குதித்து நகருவதைப் பார்த்தபடி, டாக்டர் சஞ்சீவி நின்று

கொண்டிருந்தார். கடிகாரங்கள் எப்படி வேலை செய்கின்றன, விநாடிக்குவிநாடி, நிமிடத்துக்கு நிமிடம், மணிக்கு மணி, நாளுக்கு நாள் ஆண்டுக்கு ஆண்டு! ஆனால் அடிக்கடி சாவி கொடுத்து, அதை உற்சாகப்படுத்தவேண்டியிருக்கிறது. ஆனால் மனித இயந்திரம் ஒரு தடவை சாவிகொடுத்து முடுக்கிவிட்டால், கடைசிவரை ஓடிக்கொண்டேயிருக்கவேண்டும். நின்றுவிட்டால், மீண்டும் ஓடச்செய்ய முடியாது.

டாக்டர் சஞ்சீவி வார்டை விட்டுப் போவதற்குக் கிளம்பினார். அப்பொழுது டாக்டர் முத்துசாமி, "அந்த வயதானவர், தனக்கு ஆப்ரேஷன் வேண்டாமென்று சொல்லுகிறார்" என்று கூறினார்.

"மறுபடியும் தொந்தரவா?" என்று டாக்டர் சஞ்சீவி பதினெட்டாம் நம்பர் படுக்கையருகில் போனார். வயிற்றுவலியால் மிகவும் மெலிந்து காணப்பட்ட நோயாளி உற்சாகமின்றி உட்கார்ந்திருந்தார். "நேற்று கேட்டதற்கு ஆப்ரேஷன் செய்துகொள்ளச் சம்மதித்தாயே!" என்று டாக்டர் சஞ்சீவி கேட்டார்.

"நேற்று சம்மதித்தேன் பிறகு யோசித்தேன், பின் வேண்டாமென்கிறேன்!" நோயாளி மிகக் கண்டிப்பாகப் பதில் தந்தான்.

"ஏன் வேண்டாமென்கிறாய்?"

"வயிற்றைக் கீறுவார்களாம்! குடலை அறுத்துவிடுவார்களாம்! இதற்கு நான் வீட்டிற்குப் போய், நிம்மதியாகச்செத்துப்போகிறேன்."

"உனக்குள்ள நோய் குணமாக வேண்டாமா?"

"நோய் குணமாவதற்குள் என் உயிரே போய்விடும்போலிருக்கிறது. முதலில் சுண்ணம்புத் தண்ணீரைக் குடிக்கச் சொன்னார்கள்; பின் மூக்கின் வழியே ரப்பர் குழாய்விட்டு, வயிற்றைக் குடைந்தார்கள். இப்பொழுது ஒன்றும் புரியாமல், வயிற்றைக் கீறி உள்ளே இருப்பதைப் பார்க்கப்போகிறார்கள்!"

"ஆப்ரேஷன் செய்தால்தான், வயிற்றில் உள்ள ரணம் ஆறும், பின் வலி இருக்காது."

"பரவாயில்லை, என்னுடைய வயிறு, அதைப்பற்றி எனக்கு அக்கரை உண்டு!"

வயதான நோயாளி கோபமாகப் பேசியதையெல்லாம் டாக்டர் சஞ்சீவி பொறுமையுடன் கேட்டுவந்தார். "வயிறு, அதிலுள்ள ரணம், அதனால் வரும் எல்லாம் உன்னுடையது தான். அவற்றை யாரும் எடுத்துக்கொள்ள மாட்டார்கள். எதையும் நீ சரியாகச் சாப்பிட முடியாது, சாப்பிட்டாலும் வயிற்றுவலியும், வாந்தியும் வரும்."

"இப்பொழுது கிடையாது."

"ஆமாம்! ஆனால் ஒருவாரம், இரண்டு வாரம் கழித்துவரும். உங்களை யாரும் கட்டாயப்படுத்தவில்லை. வயிற்று வலியோடு, நோயோடுதான் இருப்பேன் என்றால், தாராளமாக இருங்கள்!" அதற்குமேல் நேரத்தை வீணாக்க டாக்டர் சஞ்சீவி விரும்பவில்லை. அந்தப் படுக்கையைவிட்டுக் கிளம்பினார். நோயாளிகளின் நோயைப் போக்க முயலலாம், ஆனால் அவர்களின் பிடிவாதத்தைப் போக்க என்னசெய்வது?

"டாக்டர், சார்!" நோயாளி திரும்பக் கூப்பிட்டார்.

டாக்டர் சஞ்சீவி திரும்பிப் பார்த்தார்.

"நான் ஆப்ரேஷன் செய்துகொள்கிறேன்."

டாக்டர் சஞ்சீவிக்குச் சிரிப்பு வந்தது. "நாளைக்கு மறுபடியும் மனம்மாறினால், யாரும் சமாதானம் சொல்லமாட்டோம். சரியென்று விட்டுவிடுவோம்."

டாக்டர் சஞ்சீவி திரும்பி வரும்பொழுது 22-வது படுக்கை பக்கத்தில் சிறிது தாமதித்தார். சுற்றிலும் தடுப்பு வைக்கப்பட்டிருந்தது. நோயாளி சற்றுக் கண்ணை மூடியபடி, வாயைத் திறந்து மூச்சுவாங்கிக்கொண்டிருந்தான். கன்னங்கள் ஒட்டி, கைகள் சுருங்கி உலர்ந்து இருந்தன. மூச்சு வேகமாக வந்துபோனது, இடையே சில இருமல்கள் வந்தன, முகத்தில் வேதனை படர்ந்திருந்தது. டாக்டர் சஞ்சீவி பேசாமல் நோயாளியைப் பார்த்துக்கொண்டிருந்தார். பக்கத்தில் இருந்த உதவி டாக்டர்களுக்கு நோயாளியின் தன்மை நன்கு தெரிந்தது. நோயாளி மரணத்துடன் போராடிக் கொண்டிருக்கிறான். எவ்வளவு தனிமையாக, எவ்வளவு வேதனையுடன் அவனுடைய போராட்டம் இருக்கிறது. அவன் என்ன நினைத்துக்கொண்டிருக்கிறான், அல்லது நினைவு சரிந்துபோய்க்கொண்டிருக்கும் நிலை வந்துவிட்டிருக்கலாம். ஒரு மனநிலை, நினைவு சரிந்தால் அவனது வாழ்வு பூராவும் சரிந்தது மாதிரிதான். தங்கம் அந்த நோயாளியைப் பார்த்துக்கொண்டிருந்தாள். "என்ன செய்யலாம்?" ஒவ்வொருவரும் தங்கள் மனதில் கேட்டுக்கொண்டனர். "இனி ஒன்றும் முடி

யாது!" அந்தக் கடினமான பதில்தான் அவர்கள் உள்ளத்தில் கேள்விக்கு முன்னதாகவேத் தயாராக இருந்தது.

"இன்று பால்கஞ்சிக் கொடுக்கப்பட்டதா!" டாக்டர் சஞ்சீவி கேட்டார்.

"கொடுத்தோம் உள் இறங்கவில்லை. தாகம் இருக்கிறது. குளுகோஸ் தண்ணீர் கொடுக்கிறோம். இன்று விக்கல் அடிக்கடி இருக்கிறது."

உதட்டைப் பிதுக்கிக்கொண்டு டாக்டர் சஞ்சீவி நின்றார். "கிட்னி தளர்ந்துவருகிறது. நேற்று கொடுத்த இன்ஜெக்ஷனைத் திரும்பக் கொடுக்கவும்! நம்மால் முடிந்தவரை செய்ய வேண்டும்."

டாக்டர் சஞ்சிவி உதவி டாக்டர்கள் பின் தொடர வெளியேறினர். மாடிப் படிக்கட்டில் மற்றவர்கள் முன்னால் இறங்கிவிட்டனர். தங்கமும், சரளாவும் பின்னால் வந்துகொண்டிருந்தனர். அப்பொழுது அனாதைச் சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த வேலையாள் 'வேகமாக இறங்கிவந்தான்.

"உங்களைத்தான் தேடிவந்தேனம்மா, இந்தாங்க!" என்று வேலையாள் கடிதத்தை நீட்டினான். "சகுந்தலா அம்மாவைக் காலையிலிருந்து காணோம். எங்கு போயிருக்கிறார்கள் என்று தெரியவில்லை, உங்களுடைய விலாசம் போட்டு இந்தக் கடிதம் இருந்தது. ஆயா எடுத்துக் கொடுத்தார்கள்."

தங்கம் கடிதத்தைப் பிரித்தாள். "அன்புள்ள டாக்டர் தங்கம் அவர்களுக்கு, வணக்கம். நான் திடீரென்று ஊர் போகவேண்டிய நிலை ஏற்பட்டது. நான் செல்கிறேன். திரும்பி வருவேன் என்று கூறமுடியாது. ஆதலால் இந்தக் கடிதத்தின்மூலம் எனது வேலையை விட்டுவிடுகிறேன்.

தாங்கள் காட்டிய பரிவுக்கும், தந்த ஆதரவுக்கும் எனது நன்றி. இறக்கும்போதும் தங்களுடைய அன்பை நான் மறக்கமாட்டேன். இப்படிக்கு சகுந்தலா."

கடிதத்தைப் படித்ததும் தங்கத்திற்கு ஒன்றும் புரியவில்லை. இரண்டு மூன்று தடவைகள் கடிதத்தைத் திரும்பத் திரும்பப் படித்துப் பார்த்தாள், அதே எழுத்துக்கள் சொற்றொடர்கள்தான் கடிதத்தில் இருந்தன. கடிதத்தை மடித்துப் பையில் வைத்துக்கொண்டு தங்கம் முன் சென்றாள்.

சுற்றிப் பார்த்து முடிந்ததும்' டாக்டர் சஞ்சீவி தனியாகப் புறப்பட்டார். தங்கம் அவருடன் கூட நடந்தாள்.

"என்ன, தங்கம்!" என்று சஞ்சீவி கேட்டார்.

"ஒன்றுமில்லை; சகுந்தலா வேலையைவிட்டுப் போய்விட்டாள்!" என்று தன் பையிலிருந்த கடிதத்தைத் தங்கம் எடுத்துக்கொடுத்தாள்.

"ஏன் போய்விட்டாள்? மிகத் திறமையுடன் வேலைபார்த்தாள். சம்பளம் கூட உயர்த்தலாம் என்றிருந்தோம். இனிமேல் என்ன செய்வது. வேறொருவரை நியமிக்கவேண்டியதுதான்! நீ கவலைப்படவேண்டாம். விளம்பரம் செய்தால், நல்ல திறமைசாலிகளைப் பொறுக்கியெடுத்துவிடலாம்."

"நான் அதற்காகக் கவலைப்படவில்லை. சகுந்தலாவைப்பற்றித்தான் கவலைப்படுகிறேன்."

அனாதைச் சிறுவர் இல்லத்துக்குள் தங்கம் வந்தபொழுது எல்லாம் அலங்கோலமாகக் கிடந்தன. சகுந்தலா இருந்த அறைக்கு முன் வேலைக்காரர்கள் கூடிப் பேசிக்கொண்டிருந்தனர். டாக்டர் தங்கத்தைப் பார்த்ததும் அவர்கள் பேச்சை நிறுத்திக்கொண்டனர். அவர்கள் என்ன பேசிக்கொண்டிருப்பார்கள் என்பதை அவளால் ஒருவாறு ஊகித்துக்கொள்ள முடிந்தது.

சகுந்தலா அறைக்குள் மாறுதல் அதிகமாகக் காணப்படவில்லை. அவள் வைத்திருந்த பெட்டியும் சில புடவைகளும் இப்பொழுது இல்லை. கண்ணாடி, படம், சில துணிமணிகள், தொட்டில், அதன்மீது சுற்றப்பட்டிருந்த கொசுவலை எல்லாம் இருந்தன. கைக்குழந்தையுடன் அவள் அவசரமாக, ஏன் போய்விட்டாள் என்று தங்கத்திற்குப் புரியவில்லை.

வேலைக்காரர்களையும், ஆயாவையும் கூப்பிட்டுத் தங்கம் விசாரித்தாள். சகுந்தலா போனதற்கான காரணத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. காலையில் சகுந்தலா போனதுகூட ஒருவருக்கும் தெரியவில்லை.

"நான் எழுந்துவந்தபோது, தோட்டக் கதவு திறந்துகிடந்தது. அப்பொழுது கோழி கூவ, இரண்டுநாழி முன்னம் இருக்கும். அதற்கப்புறம் நான் அந்த அம்மாவைப் பார்க்கவில்லை."

விடிவதற்கு முன்பே சகுந்தலா புறப்பட்டுப் போயிருக்கவேண்டும். இரவு யார் கடைசியா

கச் சகுந்தலாவைப் பார்த்தது. இரவு தந்தி, கடிதம் ஏதாவது வந்ததா?

தோட்டக்காரன் பதில் சொன்னான். "இரவு பதினொரு மணிக்குமேல் நான் குடிசையை விட்டு வந்தேன். சகுந்தலா அம்மாவும், இன்னொரு ஆசாமியும் அந்த மரத்தடியில் நின்று பேசிக்கொண்டிருந்தார்கள். எவ்வளவு நாழியாகப் பேசிக்கொண்டிருந்தார்கள் என்று தெரியாது. நான் தோட்டத்துக்கு வந்தபொழுது சகுந்தலா அம்மா தனது அறைக்கு வேகமாக ஓடிக்கொண்டிருந்தார்கள். அவர்களோடு பேசிக்கொண்டிருந்தவர் 'நாளைக்கு வருவதாக'ச் சொல்லிவிட்டுப்போனார். அதற்கப்புறம் எனக்கொன்றும் தெரியாது."

தோட்டக்காரன் சொன்னதிலிருந்தும், தங்கத்தால் ஒன்றும் உணர்ந்துகொள்ள முடியவில்லை. ஒருசமயம் ஊரிலிருந்து முக்கியமான செய்தியை அந்த ஆசாமி கொண்டுவந்திருப்பான், அவசரமான செய்தியாக இருந்ததால், சகுந்தலா விடியற்காலையில் புறப்பட்டுச் சென்றிருக்கவேண்டும். தங்கம் இவ்வாறு சமாதானம் செய்துகொண்டாள். சகுந்தலா திடீரென்று போனதற்குப் பல காரணங்களைக் கண்டுபிடித்துத் தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டபோதிலும், எவ்வளவுதான் அவசரமான வேலையென்றாலும் தன்னைப் பார்த்துச் சொல்லிவிட்டுப் போகாதது தங்கத்திற்கு மனக்குறை தந்தது. கடந்த நான்கு வாரங்களாக, சகுந்தலாவும் தங்கமும் மிக நெருங்கிப் பழகிக்கொண்டனர். சகுந்தலாவின் உற்சாகமும், உதவிபுரியும் தன்மையும் தங்கத்திடம் ஒருவகைப் பாசத்தையும், பற்றுதலையும் உண்டுபண்ணியிருந்தது. இப்பொழுது சகுந்தலா திடீரென்று சொல்லிக்கொள்ளாமல் போய்விட்டது, அவள் மனதில் உருவாகி வந்த ஓவியம் திடீரென மறைக்கப்பட்டது போலிருந்தது.

மறுநாள் காலை டாக்டர் சஞ்சீவி தங்கத்தைப் பார்த்தபொழுது, அநாதைச் சிறுவர் இல்லத்தைப்பற்றி கேட்டார். "இன்னும் ஒன்றும் தெரியவில்லை. சகுந்தலா அவளுடைய ஊருக்குப் போயிருக்கிறாள். அவளிடமிருந்து கடிதம் ஏதாவது வரும். அவள் திரும்பி வராவிட்டால், வேறு யாரையும் நியமித்துக்கொள்ளலாம்" என்று தங்கம் சொன்னாள்.

ஆனால் தங்கம் எதிர்பார்த்தபடி, சகுந்தலா போய் நான்கு நாட்களாகியும் கடிதமெதுவும் வரவில்லை, சகுந்தலா நிச்சயமாகத் திரும்பி வராமல் போய்விட்டாள் என்று தங்கம் தீர்மானித்துக்கொள்ளவேண்டியிருந்தது.

* * *

பன்னிரண்டிலிருந்து ஒருமணிவரை ஆஸ்பத்திரியில் உணவு பரிமாறும் வேளை. சமையல் கட்டடத்திலிருந்து தள்ளுவண்டிகள் ஒவ்வொன்றாக உருண்டுபோய்க்கொண்டிருந்தன. உணவு வேளை வந்ததும், நடமாடக்கூடிய நோயாளிகள் உணவுத் தட்டுகளைக் கழுவி வைத்துக்கொண்டிருந்தனர். எழுந்து வரமுடியாதவர்களுக்கு வார்டுகளில் இருக்கும் நர்சுகள் உதவிபுரிந்தனர். வெளியில் உணவு வாசனை அடித்துக்கொண்டிருந்தது.

தங்கம் கையைக் கழுவிக்கொண்டு, உண்ண உட்கார்ந்தாள். அவளுடன் டாக்டர் சரளாவும் உட்கார்ந்திருந்தாள். இருவரும் பேசிக்கொண்டே சாப்பிட்டுக்கொண்டிருந்தனர், இரண்டு பெண்கள் கூடிவிட்டால் பேசுவது போல.

திடீரென்று டெலிபோன் மணியடித்தது' சரளா எழுந்து பதிலளித்தாள்.

"டாக்டர் தங்கமா? சற்றுப் பொறு!" என்று சரளா நிறுத்தினாள், "தங்கம்! காஷுவல்டிக்கு உன்னை வரச்சொல்கிறார்கள்."

"யார்?"

"டாக்டர் முத்துசாமி!"

தங்கம் தனது உணவை முடித்துக்கொண்டு எழுந்து சென்றாள்.

தங்கம் உள்ளே நுழைந்தபொழுது, இரண்டு போலீஸ்காரர்கள் அங்கு நின்றுகொண்டிருந்தனர். பரிசோதனை மேஜையைச் சுற்றிக் கூட்டம் இருந்தது, நர்சுகள், வேலையாட்கள், மேஜையில்கிடந்த நோயாளியின் நாடியைப் பார்த்தவண்ணம் டாக்டர் முத்துசாமி நின்றுகொண்டிருந்தார். மூர்ச்சையாகிக்கிடந்த நோயாளியின் முதுகை அழுத்தி, முதற் சிகிச்சை கொடுத்துக்கொண்டிருந்தனர்.

தண்ணீரில் மூழ்கியது! தங்கம் அருகில் சென்று பார்த்தாள்.

மூர்ச்சையாகிக்கிடந்தது, சகுந்தலா!

சற்று தூரத்தில் மற்றொரு மேஜையில் குழந்தை மூடப்பட்டு கிடந்தது. தங்கம் குழந்தையைத் தொட்டுப்பார்த்தாள். அது இறந்துவிட்டது.

(தொடரும்)

மக்கட் பெருக்கம்

["டாக்டர்"]

இந்தியத் துணைக்கண்டத்தில் மக்கட் பெருக்கம் ஒரு முக்கியமான பிரச்சினையாக இருந்துவருகிறது. இந்தியாவில் பெருகிவரும் மக்கட் தொகையைக் காணும்போது, எதிர் காலத்தைப் பற்றிச் சிந்திப்பவர்களுக்குக் கவலையும் கலக்கமும் ஏற்பட்டே தீரும் மற்ற எந்தவளம் சீராகப் பெருகினாலும் பெருகாவிட்டாலும், மக்களின் எண்ணிக்கை வளம் மட்டும் நாளுக்குநாள் பெருகிக்கொண்டேபோகிறது!

1951-ம் ஆண்டில் எடுத்த கணக்குப்படி இந்தியாவின் மொத்த மக்கட்தொகை $35\frac{1}{2}$ கோடியாகும். இந்த $35\frac{1}{2}$ கோடி மக்களும் ஏறத்தாழ 14 இலட்சம் சதுரமைல் பரப்பில் சிதறிக் கிடக்கின்றனர். அதாவது ஒரு சதுரமைல் பரப்பில் சுமார் 313 பேர்கள் வாழ்கிறார்கள் என்று பொருள். கடற்கரையின் ஓரங்களிலும், கங்கை காவிரிபோன்ற பெரிய ஆறுகளின் வண்டல் மண் படிந்த வளமான பகுதிகளிலும் சதுரமைல் ஒன்றுக்கு 1000 பேர்கள் வீதம் வாழ்கிறார்கள். உலக மக்கட்தொகையில் இந்தியாவின் மக்கட்தொகை மட்டும் 15·1 சதவிகிதமாகும். ஒவ்வொரு ஆண்டும் இந்தியாவின் மக்கட்தொகை சராசரி 50 இலட்சம் வீதம் பெருகிக்கொண்டே போகிறது. ஆண்டு ஒன்றுக்கு சராசரி 1000 பேர்களுக்கு 27 குழந்தைகள் வீதம் பிறக்கிறார்கள், 16 பேர்கள் வீதம் இறக்கிறார்கள். இந்த விகிதத்தில் மக்கள் எண்ணிக்கை பெருகிக்கொண்டே போனால், இன்னும் 45 அல்லது 50 ஆண்டு காலத்தில், இந்தியாவின் மக்கட் தொகை இப்போதிருப்பதைவிட இரண்டுமடங்கு ஆகி விடும்.

மக்கட் பெருக்கம் இரண்டு மடங்குகளாக ஆகும்போது, மக்களுக்கு இன்றியமையாத் தேவைகளாக விளங்கும் உண்டி—உடை—உறையுள் போன்ற வாழ்க்கை வசதிகளும், கல்வி—கேள்வி போன்ற அறிவு வசதிகளும், தொழில்—கலை போன்ற ஆற்றல் வசதிகளும் போதுமான அளவுக்குப் பெருகுமா என்று எண்ணிடும்போதுதான் திகிலும் திகைப்பும் ஏற்படுகின்றன. எண்ணிக்கைப் பெருக்கம் செல்லும் விரைவிற்கு ஏற்ப, வசதிகளின் உற்பத்திப் பெருக்கம் போட்டி போட்டுக் கொண்டு செல்ல முடிவதில்லை; மிகமிகப் பின் தங்கிப்போய்விடுகிறது. இப்பொழுதே மக்களுக்குப் போதுமான அளவு உணவு கிடைப்பதில்லை. மக்கள் சாப்பிடும் உணவின் அளவைக் கணக்கிட்டால், ஒவ்வொருவரும் சாப்பிடவேண்டிய அளவில் சராசரி 22 சதவிகிதம் குறைவாகத்தான் சாப்பிடுகிறார்கள். அதாவது கிடைக்கும் உணவுப்பொருள் வயிற்றுப் பசியைத் தணிக்கும் அளவுக்கு 100-க்கு 78 பேர்களுக்குத்தான் வரும்; மீதி 22 பேர்கள் அறவே உணவற்றவர்களாகத்தான் இருக்க வேண்டி வருகிறது. 100-க்கு 78 பேர்களுக்குக் கிடைக்கும் உணவும், வயிற்றுப் பசியைத் தீர்க்கத்தான் பயன்படுகிறதேயொழிய, உடலுக்குத் தேவையான உணவுச்சத்தைக் கொடுப்பதாக அமையவில்லை. இந்தியாவின் உணவு அவ்வளவு சத்து குறைந்ததாக இருக்கிறது. ஒரு நாடு கவலையற்ற இன்ப வாழ்வு நடத்தவேண்டுமானால், மக்கள் எண்ணிக்கைக்குத் தேவையான அளவு வாழ்க்கை வளங்களின் நிறைவு இருக்கவேண்டும். நாடு நல்வாழ்வு வாழ மக்களுக்கும்—வசதிகளுக்கும், மக்கள் வளத்திற்கும்—நிலவளத்திற்கும் இருக்கவேண்டிய நெருங்கிய தொடர்பு குறையாமல், குலையாமல் சீர்காக்கப்படவேண்டும்.

இந்தியாவின் சராசரி வருமானம், பிறநாடுகளின் சராசரி வருமானத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, மிகமிகக் குறைவாகும். இந்தியாவில் ஒருவரின் சராசரி ஆண்டு வருமானம் ரூ. 240 ஆகும். இதிலிருந்து இந்தியா எவ்வளவு ஏழ்மையிலும் வறுமையிலும் அறியாமையிலும் உழலுகின்றது என்பதையும், உணவு—உடை—உறையுள் ஆகியவற்றில் எவ்வளவு பற்றுக்குறைப் பகுதியாக இருந்து வருகிறது என்பதையும் அறிந்துகொள்ளலாம். மக்களில் 100-க்கு 83 பேர்கள் இன்னும் கல்வியறிவற்றவர்களாகவே இருக்கிறார்கள். உயர்தரக் கல்வி, பொதுநலம், மருத்துவம் போனற வசதிகளை நகர்ப்புறங்களில் வாழும் 100-க்கு 20 பேர்களே நுகர்கிறார்கள்; சிற்றூர்களில் வாழும் 100-க்கு 80 பேர்கள்

அத்தகைய வசதிகளை எளிதாகப் பெறமுடிவதில்லை. சிற்றூர்களில் வாழும் பெரும்பாலானோரின் வீடுகள் குடிசைகள்; நோய்க்கிருமிகள் தோன்றுவதற்கான சூழ்நிலைகள் கொண்டவைகளாக இருக்கும்; குடிசைகளில் நல்ல காற்றோட்டத்தையும் வெளிச்சத்தையும் காண முடியாது; இடவசதியோ மிக நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கும்; சமைத்தல், உண்ணல், இருத்தல், குளித்தல், விளையாடுதல், படுத்தல் போன்ற எல்லா நடவடிக்கைகளையும், பழக்க வழக்கங்களையும் எல்லோரும் அச்சிறு இடத்தில்தான் மேற்கொள்ள வேண்டும். சுருங்கக்கூறினால் ஏழ்மை, வறுமை, அறியாமை, பிணியுடைமை, அக்கறையின்மை ஆகியவைகள் தொடர்ந்தடிக்கும் சூறையிலே "பிள்ளையோ பிள்ளை!" என்று நாடு கதற வேண்டியிருக்கிறது.

இந்தியாவில் மக்கட்பெருக்கம் பெருகிக் கொண்டேபோவதற்கு, இந்தியாவில் நிலவும் அரசியல்—பொருளியல்—சமூகவியல் — சமயவியல் பற்றிய சில பல உண்மைகள் முக்கிய காரணங்களாக இருக்கின்றன. அவைகளில் ஒருசில வருமாறு:

(1) இந்தியாவில் சென்ற இரண்டு நூற்றுண்டுகளாகப் பெரும்போர் எதுவும் ஏற்படாமல் அமைதி நிலவி வருகிறது. நாட்டில் அடிக்கடி ஏற்படும் பெரும்போர்கள் பெருவாரியான மக்களைக் குறைப்பதற்குக் காரணமாக இருப்பதுண்டு. அத்தகைய காரணம் ஏதும் நிகழாததால் இந்தியாவின் மக்கட்பெருக்கம் அந்தவகையில் குறைய வழி ஏற்படவில்லை.

(2) மக்கள் எண்ணிக்கைக் கணக்கெடுக்கும் அமைப்புகள் நாளுக்குநாள் செம்மைப்பட்டுச், சரியான புள்ளி விபரம் தரமுற்படுவதால், மக்கட் பெருக்கம் பெருகிவிட்டதுபோல் தோன்ற சிறிது ஏது ஏற்படுகிறது.

(3) 1943-ம் ஆண்டில் வங்காளத்தில் ஏற்பட்ட பஞ்சத்தைத்தவிர, பெருவாரியான மக்களைக் கொள்ளைகொள்ளும் கொடிய பஞ்சங்கள் நாடெங்கும் அண்மைக்காலத்தில் தோன்றவில்லை. மக்கட்பெருக்கம் அந்தவகையால் குறையும் நிலைமையும் ஏற்படவில்லை.

(4) தொத்துநோய்களைத் தடுக்கும் பொது நலத்துறை நடவடிக்கைகள் அண்மைக் காலங்களில் மிகமும்முரமாக மேற்கொள்ளப்படுவதால், இறப்பு விகிதம் முன்புபோலில்லாமல் குறைந்துவிட்டது.

(5) சிற்றூர்களில் மேற்படிப்பு படிப்பதற்கான வசதிகள் இல்லாத காரணத்தாலும், நேரம் முழுவதையும் தொடர்ந்து செலவழிக்கக்கூடிய தொழில் துறைகள் இல்லாத காரணத்தாலும், சிற்றூர்களிலுள்ள பெரும்பாலோர் சிறு வயதிலேயே வேலை ஏதும் அற்ற பொழுதுபோக்காளர்களாக ஆகிவிடுகிறார்கள். அதனால் அவர்களுக்குச் சிறுவயதிலேயே திருமணம் நடந்தேறிவிடுகிறது. இளம் மணமக்கள் எவ்வளவு விரைவில் மிகவான பிள்ளைகளைப் பெற்றெடுக்க முடியுமோ அவ்வளவு பிள்ளைகளையும் பெற்றெடுத்துவிடுகிறார்கள். இதனால் மக்கட்பெருக்கம் விரைவாகக் கூடிக் கொண்டு போகிறது. இப்பொழுது இந்தியாவில் மணமான பெண்களில் 100-க்கு 40 பேர்கள் 15 வயதுக்குக் குறைந்தவர்களாகத்தான் இருந்துவருகிறார்கள்.

(6) சிற்றூர்களில் நல்லது கெட்டது தெரிந்துகொள்ள முடியாத அளவுக்கு அறியாமையும், வாழ்க்கை நெறியை அறிந்து கொள்ளமுடியாத அளவுக்குக் கல்வியறிவின்மையும், விலங்குகள் போன்று கீழ்த்தர உணர்ச்சிகளுக்கு ஓயாமல் இடம் அளிக்கும் தன்மையும் அளவுக்குமீறிய மக்கட்பெருக்கத்திற்குக் காரணமாகிவிடுகின்றன.

(7) பெரும்பாலான இல்லங்களில் சேர்ந்து வாழும் குடும்பமுறை நிலவுவதாலும், கணவனும் மனைவியும் பகற்பொழுதில் தனியே பேசி மகிழ்ந்து பழகி உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்கு வழியில்லாமல் போவதாலும், இரவுப்பொழுதில் இருட்டில் மட்டுமே ஒருவரையொருவர் காணுவதற்கான வாய்ப்பு ஏற்படுகிற காரணத்தாலும், அந்த வாய்ப்பு கூடுவதற்கு மட்டுமேயல்லாமல் வேறு வகையில் மகிழ்ந்திருப்பதற்கான நிலைமையை உண்டாக்காத காரணத்தாலும் பிள்ளைப்பேறு அடிக்கடி ஏற்பட்டுவிடுகிறது. கணவன் மனைவியர் குழந்தைகளை விரும்பாவிட்டாலும் குழந்தைகள் தொடர்ந்து பிறந்துகொண்டேயிருக்கின்றன.

(8) கருத்தடையியக்கம் நாடு முழுவதும் பரவாத காரணத்தாலும், கருத்தடை முறைகளைப் பெரும்பாலான மக்கள் தெரிந்துகொள்ளாமலிருப்பதாலும் மக்கட்பெருக்கம் தடைப்படுவதற்கு வழியில்லாமல் இருக்கிறது. கருத்தடைபற்றி பயிற்சித்தரும் மருத்துவ விடுதிகள் ஆங்காங்கு இல்லாமலிருப்பதும் மக்கட்பெருக்கம் மிகுவதற்கு ஒரு காரணமாகும்.

மக்கள் தொகை வளர்ந்துகொண்டு போவதை உணர்ந்து, அதனை அரசாங்கத்தின் மூலம் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முனைந்த முதல் நாடு இந்தியா

வாகும். குடும்பக் கட்டுப்பாடு ஏற்படவேண்டும் என்ற உணர்வு இப்பொழுதுதான் படித்த மக்களிடையே சிறிது அரும்பியுள்ளது. என்றாலும் போற்றத் தகுந்த அளவுக்கு உணர்வு வேரூன்றவில்லை. குடும்பக் கட்டுப்பாடு முறையைக் கற்பிக்கும் திட்டத்தைச் சிற்சில இடங்களில் இந்திய அரசாங்கம் நடைமுறைப்படுத்தியுள்ளது. குடும்பம் பெருத்துக்கொண்டு போகிறதே என்ற கலக்கமும், பெருகாமல் இருந்தால் நல்லது என்ற கவலையும் பெரும்பாலான குடும்பங்களில் இப்பொழுது ஏற்பட்டுள்ளன. ஆனால் அந்தக் கவலையைப் போக்கிக்கொள்வதற்கான வழிவகைகளைக் காணமாட்டாமல் தவிக்கிறார்கள். மக்கட் பெருக்கத்தைக் குறைப்பதற்குக் காரணமாக ஏற்றதாகவும், எளிமையானதாகவும், உறுதியானதாகவும், மேற்கொள்ளக்கூடியதாகவும் இருக்கும் முறை கருத்தடையாகும். எனவே இந்தியாவிற்கு உடனடியாகத் தேவைப்படுவது என்னவென்றால், பயன்படத்தக்கதும், உறுதியானதும், துன்பம் ஏதும் தராததும், எளிமையாகப் புரிந்துகொள்ளக்கூடியதும், எந்த நேரத்திலும் மேற்கொள்ளக்கூடியதும், பழங்கால பழக்கவழக்கங்களைக்கொண்ட கற்றறிவற்றவர்களாலும் அறிந்துகொள்ளக்கூடியதும் ஆன ஒரு கருத்தடை முறையாகும். கருத்தடையியக்கத்தை வைதிக மதவாதிகளைத்தவிர ஏனையோர் விரும்பவே செய்வர் என்பதில் ஐயமில்லை. கிருஸ்தவ கத்தோலிக்க மதந்தான் மத அடிப்படையில் கருத்தடையியக்கத்தை முழுமூச்சாக எதிர்க்கிறது. என்றாலும் கருத்தடையியக்கத்துக்கு ஆதரவும் ஆக்கமும் மக்கள் பெருக்கம் வளர்ந்துவரும் நாடுகளில் இதுநாளில் ஏற்பட்டுவருகின்றன.

கருத்தடை பற்றிய ஆராய்ச்சிமுறைகளை அறிந்துகொள்ளவும், அவற்றைப் பரப்புவதற்கான வழிவகைகளைத் தெரிந்துகொள்ளவும் இந்திய அரசியலார், அமெரிக்கா நியூயார்க் நகரத்தில் வாழும் கருத்தடை நிபுணரான டாக்டர் ஆப்ரகாம் ச்டோன் (Dr. Abraham Stone) என்பவரை 1951-ம் ஆண்டில் இந்தியாவிற்கு வரவழைத்தனர். அவர் இந்தியாவின் பொதுநலத்துறை (சுகாதார இலாகா) அமைச்சர், டாக்டர்கள், சமூக நற்பணியாளர்கள், கற்றறிந்த இந்தியப் பெண்கள் ஆகியவர்களோடு கலந்து ஆராய்ச்சி உரையாடல் நடத்தினார். அவர் புதுடெல்லி, மேற்கு வங்காளம், மைசூர், சென்னை ஆகிய நான்கு பகுதிகளிலும் ஐந்து புதுமாதிரிக் கருத்தடை ஆராய்ச்சி நிலையங்கள் ஏற்படுத்துவதற்குப் பேருதவியாக இருந்தார். பிறகு தேசிய குடும்பக் கட்டுதிட்டச் சங்கம் (National Family Planning Association) ஒன்று லேடி ராமாராவ் தலைமையின்கீழ்த் துவக்கப்பட்டது. அமெரிக்காவில் கருத்தடை இயக்கத்தைப் பரப்புவதற்கு அரும்பாடுபட்ட தோழியர் மார்க்ரெட் சாங்கர் (Mrs. Margaret Sanger) தலைமையில், பம்பாயில், மூன்றாவது அகில உலகக் கட்டுதிட்டப் பெற்றோர்மை மாநாடு (3rd International Planned Parenthood Conference) நடைபெற்றது. இவையெல்லாம் இந்தியாவில் கருத்தடை இயக்கத்தை எப்படி வெற்றிகரமாக ஆக்கலாம் என்பதற்கான வழிவகைகளைப் பற்றி ஆராய்ச்சிகள் நடத்தின. 1951-ம் ஆண்டிற்குப்பிறகு இந்தியாவில் 28 நகரங்களில் சுமார் 200 கருத்தடை மருத்துவச்சாலைகள் ஏற்படுத்தப்பட்டன. இந்த மருத்துவச்சாலைகளை ஆங்காங்குள்ள தாய்மை—குழந்தை நல்வாழ்வு நிலையங்களோ அல்லது பெண்கள் மருத்துவ விடுதிகளோ அல்லது பிள்ளைப்பேறு மருத்துவக் கூடங்களோ கண்காணித்துவருகின்றன. டாக்டர் ஆப்ரகாம் ச்டோன் அவர்களின் கீழ்த் தனியாகப் பயிற்சியளிக்கப்பட்ட டாக்டர்களிடம் இந்த மருத்துவச்சாலைகள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. பெற்றோர்களுக்குக் கருத்தடை முறையைக் கற்றுக்கொடுக்கவே இந்த மருத்துவச்சாலைகள் இருக்கின்றன என்றாலும், இவற்றைப் பயன்படுத்திக்கொண்டோர் மிக மிகக் குறைவானவர்கள் ஆவார்கள்.

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் இந்தியா இன்னமும் இருண்ட கண்டமாகத்தான் காட்சியளிக்கிறது. என்ன செய்வது ஏது செய்வது என்று புரியாமலும், தெளிவுபெறாமலும் படித்தவர்களும் படியாதவர்களும் பிள்ளைகளை அளவுக்கு மேல் பெற்றுக்கொண்டேயிருக்கிறார்கள். பிள்ளைகளைப் பெற்றெடுத்து அவைகளைக் காப்பாற்றவும், வளர்க்கவும், அவைகளுக்கு உணவு உடை வழங்கவும், கல்வி தொழில் கற்பிக்கவும் வகை தெரியாமல் திண்டாடித் தவித்துத், தாங்கள் தொல்லைப் படுவதோடு பிள்ளைகளையும் துன்பத்திற் காளாக்கும் அந்த நிலைமையைவிட, அளவுக்குமேல் பிள்ளைகள் பிறக்காமல் தடுத்துக்கொள்ளும் நிலையைப் பெறுவது எவ்வளவோ நலம் பயப்பதல்லவா! அந்த நிலை பெற்றோர்களுக்கு மட்டுமல்லாமல் நாட்டுக்கும் எவ்வளவோ நன்மை பயப்பதாகும் என்பதைப் பிள்ளைப்பெருக்கம் செய்யும் ஒவ்வொருவரும் உணரவேண்டும். அந்தப்படிக்கு ஒவ்வொருவரையும் உணரச்செய்ய அரசாங்கமும், டாக்டர்களும், சமூக நற்பணியாளர்களும் அரும்பாடுபடவேண்டும். அப்பொழுதுதான், நாடு, மக்கட்பெருக்கத்தால் ஏற்படும் தொல்லைகளை ஓரளவுக்குத் தீர்க்கும் இயல்பைப் பெற முடியும்!

உழைப்பு தரும் உயர்வு

[இரா நெடுஞ்செழியன்]

தொழிலாளர் பிரச்சினை பற்றி ஓயாமல் ஒழியாமல் பேசப்படுகிறது ; ஆனால் எந்த ஒரு நல்ல முடிவும் இதுகாறும் எடுக்கப்படவில்லை. முதலாளி—தொழிலாளிகளுக்கிடையே பகை, பிளவு, தகராறு, சண்டை, சச்சரவு ஆகியவைகள் வளர்ந்துகொண்டேபோகின்றன ; ஓய்ந்தபாடில்லை. பகைமையைப்போக்கவும், தகராறைத் தீர்க்கவும் எத்துணையோ வழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. ஆனால் எந்த ஒரு வழியும் நிலையான அமைதியையும், நட்புறவையும் ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை. முதலாளியும் தொழிலாளியும் ஒருவரையொருவர் விரும்பும் வகையில் மாதிரி முறைகள் சிலமேற்கொண்டு பார்க்கப்பட்டன ; எதுவும் பயன்தரவில்லை.

தொழிற்சாலையின் மூலம் கிடைக்கப்பெறுகின்ற மிக்க வருவாயில் தொழிலாளர்க்கும் பங்கு கொடுத்தல் என்ற முறையை வற்புறுத்தினால், வருவாய்க்குறைவில் அவர்கள் பங்கு ஏற்க ஆற்றல் அற்றவர்களாக இருக்கிறார்களே என்ற கேள்வியை முதலாளிகள் எழுப்புகிறார்கள். மக்கட் சமூகம் முழுவதும் பொதுவாக உழைத்து, ஏற்படும் செலவைப் பொதுவாக ஏற்றுக், கிடைக்கும் மிக்க வருவாயை எல்லோரும் பிரித்துக்கொள்வது என்ற முறை சமூகத்தை நன்னிலைப் படுத்தவல்லது என்றாலும், அதற்கான சூழ்நிலைகள் எங்கணும் ஏற்படவில்லை. எடுக்கும் முயற்சிகளும் தோல்வியடையச் செய்யப்படுகின்றன.

முதலாளி—தொழிலாளிகளுக்கிடையே ஏற்படும் தகராறுகளைத் தீர்த்துவைக்க நடுநிலையாளர்க் குழுவின்மூலம் முயன்றால், அத்தகைய குழுவின் தீர்ப்புகள் நிறைவேற்றி வைக்கப்படாமலேயே போய்விடுகின்றன. நடுநிலையாளர்க்குழுவின் தீர்ப்புகள் முதலாளிகளைத்தான் கட்டுப்படுத்துவதாக அமைகின்றனவே ஒழிய, தொழிலாளர்களைக் கட்டுப்படுத்துவதாக அமையவில்லை என்ற குற்றச்சாட்டை முதலாளிகள் கூறுகின்றனர். தாங்கள் தொழிலாளர்க்கு மிக்க ஊதியம் தரவேண்டிய கடப்பாடுடையவர்களாக மாறவேண்டியிருக்கிறதேயல்லாமல், தொழிலாளர்கள் நல்ல வேலை செய்யக்கூடியவர்களாக அத்தீர்ப்புகளால் மாறுவதில்லை என்று முதலாளிகள் முணுமுணுக்கிறார்கள். இக்காரணம்பற்றி முதலாளிகள் நடுநிலையாளர்க்குழுவின் தீர்ப்புகளுக்குக் கட்டுப்பட மறுக்கின்றனர். எனவே இந்த வழியும் முதலாளி—தொழிலாளி சச்சரவைத் தீர்க்கப் பயன்படுவதில்லை.

நமக்குத் தெரிந்தவரையில், வேலைக்கு அமர்த்துவோரும்—வேலையில் அமர்வோரும் நாகரிக அடிப்படையில் பண்பாடு பெற்றாலொழிய, தகராறு தீர்வதற்கான வழிகாண்பது அரிது என்றே கூறுவோம். இது அவ்வளவு எளிதாகப் பெறக்கூடிய முறையல்லவே என்றாலும் சிறிது சிறிதாகவாகிலும் என்றேனும் ஒருநாள் பெற்றுத் தீரவேண்டிய முறையாகும். இதனைச் சட்டத்தின்மூலமோ, கட்டுப்பாட்டின்மூலமோ அல்லது வலிவாற்றலின் மூலமோ அடைந்துவிடமுடியாது ; படிப்படியாக வளரும் பண்பாட்டின் மூலமேதான் பெறமுடியும்.

வேலைக்கு அமர்த்துவோர் தங்களுக்குக் கிடைக்கும் மிக்க வருவாயின் அளவை அடிப்படையாகக்கொண்டுதான், வேலைக்கு அமர்வோர்க்கு ஊதியம் கொடுக்கவேண்டியவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் சில வேளைகளில் மிக்க வருவாயைப் பெறவுஞ் செய்கின்றனர், வேறு சில வேளைகளில் பெறமுடியாமலும் போய்விடுகின்றனர். தொழில், வாணிகத் துறைகளில் போட்டிகள் ஏற்படும்போது மிக்க வருவாயினம் சிதறடிக்கப்படுவது இயல்பு. தொழிலாளிகள் எப்படி முதலாளிகளின் அருளை எதிர்பார்க்கவேண்டியவர்களாக இருக்கிறார்களோ, அப்படியே, நெருக்கடி நேரத்தில் சிறிய முதலாளிகள் பெரிய முதலாளிகளின் அருளை எதிர்பார்க்கவேண்டியவர்களாக இருக்கிறார்கள். பொருள்களின் விலையையும், மக்களின் தேவையையும், பொருள் பரிமாறுதலின் அளவையும் கள்ளத்தனமாக அல்லாமல் நேர்மையான வழியில் கட்டுப்படுத்தத் தொழில் நடத்துவோரால் முடியாமற்போகக்கூடும். இதன் காரணமாக

ஊதியத்தைக் குறைத்தல், தொழிலாளர்களைக் குறைத்தல், தொழிற்சாலையை மூடுதல் போன்ற நடவடிக்கைகளை முதலாளிகள் எடுக்கவேண்டிவரும். இப்படிப்பட்ட நிலைகள் தொழிலாளர்களை ஆதரவற்றவர்களாக, நாடோடிகளாக ஆக்கிவிடுகின்றன. இந்த நிலைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டியது நாகரிகச் சமூகத்தின் முக்கிய கடமையாகும்.

ஒரு பொருளை வாங்குபவன், அந்தப் பொருள் எவ்வளவு மதிப்பைப் பெறுமோ அவ்வளவு தொகையைக்கொடுத்து மனமகிழ்ச்சியோடு வாங்கும் நிலையும், பொருளைவிற்பவன் போதுமான மிக்க வருவாயைப் பெற்று அந்த அளவோடு மனநிறைவு பெறும் நிலையும், முதலாளி மூலப்பொருள்களை வாங்கும்போது அவற்றிற்குரிய உண்மையான விலையைக் கொடுத்தே வாங்க விரும்பும் நிலையும், முதலாளிகள் தொழிலாளர்களின் உழைப்புக்கேற்ற ஊதியத்தை உவந்து கொடுக்க முன்வரும் நிலையும் எப்பொழுதேனும் ஒருகாலத்தில் ஏற்படுமா? முதலாளிகள் தம்முடைய மிக்க வருவாயைப் பற்றிக் கவனிக்காமல், தொழிலாளர்களின் நலத்திலே அக்கரை காட்டும் அளவுக்கு முதலாளிகளிடம் நாகரிக மனப்பான்மை எப்பொழுதேனும் பிறக்குமா? முதலாளிமார்கள் நாட்டில் ஏற்படும் பஞ்சம் பசி பட்டினி வறுமை ஆகியவற்றைத் தம்முடைய கொள்ளை வருவாய்க்கு ஆக்கமாக்கிக்கொள்ளாமல், அந்த நிலைமையை இரக்கத்தோடு காணும் நாகரிகப் பண்பு எப்பொழுதேனும் முதலாளிமார்களிடத்தில் ஏற்படுமா? "எனக்காக வேலை செய்யும் வேலைக்காரனுக்கு எல்லாவித உதவிகளையும் செய்வேன், அவன் தன் மனைவி மக்களைக் காப்பாற்றுவதற்கான போதுமான வசதிகளைச் செய்துகொடுப்பேன், அவன் வயதுமுதிர்ந்து கிழப்பருவம் அடையும் போதும் அவனுக்கு உண்ண உணவும், உடுக்க உடையும் ஈவேன், குளிர்காலத்தில் அவனும் அவன் குடும்பத்தாரும் குளிரில் நடுக்கங்கொள்ளாமல் தீய்க்காய்தல் பொருட்டு அதற்குத் தேவையான வசதிகளையெல்லாம் அவன் வீட்டில் செய்துதருவேன்" என்று கூறிடும் அளவுக்கு நாகரிகத்தை முதலாளி என்றைக்கேனும் ஒருநாள் பெறுவானு? இப்படிப்பட்ட வினுக்களை எழுப்பி, விடைகளை ஏக்கத்தோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது இன்றைய நாகரிக சமுதாயம்!

உள்ளபடியே பார்த்தால் உழைப்பின் உதவியில்லாமல், மூலப்பொருளை மட்டும் வைத்துக்கொண்டு யாரும் எதையும் செய்துவிடமுடியாது. உலகத்திலுள்ள பொருள்களுக்கெல்லாம் விலைமதிப்பு ஏற்பட்டிருக்கின்றது என்றால் அது உழைப்பின் விளைவால் ஏற்பட்ட பலனாகும். உழைப்பினைக் கொடுப்பதற்கு முன்னல் பொருள்களுக்கு மதிப்பிருப்பதில்லை. காட்டின் நடுவே வளர்ந்திருக்கும் மரமும், கடலின் அடியில் கிடக்கும் முத்தும், மலையின் உள்ளே கிடக்கும் மணியும் மனிதனின் உழைப்பைப் பெறுவதற்கு முன்னல் ஒரு காசுக்கும் விலைபோகா. மனிதன் தன் உழைப்பினைக் கொடுத்து அவைகளை வெளிப்படுத்திப், பொருள்களாக உருவாக்கிய பிறகு தான் அவைகளுக்கு விலை மதிப்பு ஏற்படுகின்றது. பொருள்களின் விலை உழைப்பின் விலை என்றாகிறது. எனவேதான் உழைப்பால் உருவாகிய உலகம் உழைப்பாளர்க்கு உரிமையுடையதாகும் என்று சொல்லப்படுகிறது. பொருள்களுக்கு விலைமதிப்பு ஊட்டுபவர்களும் உழைப்பாளிகள்; அவைகளை விலைகொடுத்து வாங்குபவர்களும் உழைப்பாளிகள்தாம். தந்திரமும் திறமையும் படைத்தவர்கள், அறியாத ஏழை உழைப்பாளிகளின் உழைப்பை உறிஞ்சி நாளடைவில் முதலாளிமார்கள் ஆகிவிடுகிறார்கள். அரசாங்கத்திடம் குவியும் வரிப்பணங்கள் ஆடம்பரப் பொருள்களின்மீது போடப்படும் வரியாக இருந்தாலும் அல்லது வேறு கேளிக்கைவகையில் செலுத்தப்படும் வரியாக இருந்தாலும், அவற்றிலுள்ள ஒவ்வொரு காசும் உழைப்பாளரின் உழைப்பு தந்த செல்வமாகும்.

இப்பொழுது, நாளுக்குநாள் தொழிலாளர்கள் அறிவுடையவர்களாக மாறிக்கொண்டு வருகிறார்கள். அதனால் முதலாளிமார்களும் தங்கள் போக்கை மாற்றிக்கொள்ளவேண்டிய இன்றியமையாத நிலைக்கு வந்துவிட்டார்கள். முதலாளிகள் நாகரிகமுடையவர்களாகவும், அன்புள்ளங் கொண்டோராகவும் மாறிக்கொண்டுவருகிறார்கள். மற்றவர்களின் உழைப்பைக்கொண்டு பெரும்பொருள் ஈட்டிய பெரும்பணக்காரர்கள், தங்கள்மீது மக்களுக்கு இருக்கும் வெறுப்பைத் தணித்துக்கொள்வதற்கு, அறச்செயல்கள் பலவற்றை ஆற்ற இது நாட்களில் முற்பட்டுள்ளனர்; பள்ளிக்கூடங்களையும், மருத்துவ விடுதிகளையும், ஏழை எளியவர் பாதுகாப்பு விடுதிகளையும் இவைபோன்ற பிறவற்றையும் ஆங்காங்கு எழுப்புகின்றனர். இது எதைக்காட்டுகின்றது என்றால், மற்றவர்களின் மூளை வலிவையும் உடல் வலிவையுங்கொண்டு பெரும்பொருள் ஈட்டுபவன், அந்தப்பொருள்களுக்குத் தான் சொந்தக்காரன் அல்ல என்பதை உணர்கிறன் என்பதையாகும். பெரும்பாலான முதலாளி

கள் தாங்கள் ஈட்டிய கொள்ளை வருவாயில் பல்கலைக்கழகங்களுக்குச் சிறிது ஒதுக்கியும், பொது நூல் நிலையங்களை ஏற்படுத்தியும், குடி தண்ணீர்க்குழாய்களைப் புதுப்பித்தும், மிகச் சிறந்தவர்களுக்கு நினைவு அடையாளங்கள் எழுப்பியும் கணக்கைச் சரிக்கட்டுகிறார்கள். இதன்மூலம் பொதுமக்களிடம் அவர்கள் நல்லவர்களாகக் காட்டிக்கொள்ள விரும்புகிறார்கள். அவர்கள் இப்படிப்பட்டவைகளுக்குப் பொருள் செலவழிப்பதைவிட அதனை ஈட்டித்தருவதற்கு உண்மையாகவே பாடுபட்ட தொழிலாளர்களின் நிலை உயர்வதற்கு அந்தப் பொருளைச் செலவிட்டால் அது எவ்வளவோ மேலான செயலாக இருந்திருக்கும்.

மனித சமுதாயம் நாகரிகமுடையதாக வளரும்போது, பெரிய பெரிய தொழிற்சாலைகள், அவற்றிற்காக வாழ்நாட்களைச் செலவிடும் பாட்டாளிகளுக்குப் போதுமான வசதிகளைச் செய்துதரும் என்று நாம் எதிர்பார்க்கிறோம். பெரிய தொழில் அமைப்புகளில் ஒன்றான புகைவண்டி போக்குவரத்து அமைப்பு, அதற்காக உழைத்துத் தேய்ந்துபோன தொழிலாளர்க்குத் தள்ளாத வயதில் உதவிச்சம்பளம் கொடுக்கவேண்டும். தொழிலாளரின் ஆற்றலையும் வலிவையும் கசக்கிப் பிழிந்தெடுத்த பிறகு, அவர்கள் நலிவுற்ற வயதான நிலையில், அவர்களை வேலையைவிட்டு நிறுத்தி, அவர்கள் ஏழைகள் விடுதிகளில் வாழவேண்டிய தொல்லையான நிலைக்கு தொழிலமைப்புகள் கொண்டு வரக்கூடாது. எந்தத் தொழிலாளர்களின் முயற்சியாலும் உழைப்பாலும் தொழில் நிலையங்கள் உருவாகின்றனவோ, அந்தத் தொழிலாளர்களைக் கடைசிவரையில் காப்பாற்றவேண்டியது அந்தத் தொழில் நிலையங்களின் இன்றியமையாக் கடமையாகும். இந்த அடிப்படையில் பொதுமக்களின் எண்ணம் உருவாக்கப் படவேண்டும். கிழிந்துபோன உடுப்புகளைக் கழற்றி எறிவதைப்போல, வேலைக்குப் பயன்படுத்தப்பட்ட மனிதனை, அவன் தேய்ந்து உருக்குலைந்த பிறகு கவனிப்பாரற்றநிலையில் முதலாளிகள் ஒதுக்கித்தள்ளி விடுகின்றனர். இப்படிப்பட்டசெயலை அவர்கள் செய்ய வெட்கப்படும்படியான முறையில் பொதுமக்களின் எண்ணம் உருவாகி, முதலாளிமார்களை அது எப்பொழுதும் உறுத்திக் கொண்டிருக்கவேண்டும். அப்பொழுதுதான் முதலாளிகள் நேர்மையான வழியில் நடக்க முற்படுவார்கள்.

தொழில் வினைஞர்களும், உழைப்பாளிகளும், உழவர்களும் தம் நிலை அறிந்து ஒன்றுசேரும் காலம் ஒன்று வரும் என்பது மட்டும் உறுதி. அந்த அளவுக்கு அவர்கள் அறிவு பெற்றே தீருவார்கள். அப்பொழுதுதான் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகள் நேர்மையான முறையில் தீர்க்கப்பெறும். அப்பொழுதுதான் தொழிலாளர்கள் வாழ்க்கையின் வசதிகளைப் பெறமுடியும்; உரிமைகளை நிலைநாட்ட முடியும். இப்பொழுது தொழிலாளர்கள் பெரும்பாலும் சிதறுண்டு கிடப்பதால், கோரிக்கைகள் வெற்றிபெற முடிவதில்லை; முயற்சிகள் தோல்வியடைந்த வண்ணமாக இருக்கின்றன. தொழிலாளர்கள் ஒன்றுபட்டு நின்று நியாயமான கோரிக்கையைப் பெறப் போராடினால், உறுதியாக அவர்கள் வெற்றி பெறுவார்கள். தொழிலாளர்களின் கோரிக்கைகள் நியாயமானவைதாம் என்று பட்டால் பொதுமக்களின் ஆதரவு நிரம்பக் கிடைக்கவே செய்யும்.

தொழிலாளர்கள் போராடுவதற்கு முன்னால், உள்ளபடியே அறிவுபெறவேண்டும்; தாம் மேற்கொள்வது நியாயமான கோரிக்கையா என்று ஆராய்ந்து பார்த்துக்கொள்ளும் அளவுக்கு அறிவுபெறவேண்டும். தேவையானவற்றைக் கேட்கிறோம் என்ற நியாயவுணர்வும், மிகவாகக் கேட்கவில்லை என்ற நேர்மையுணர்வும் தொழிலாளர்களிடம் மிகச் சிறந்து காணப்படவேண்டும். அந்த நியாயமும், நேர்மையும் தொழிலாளர்களிடம் இருக்கின்றன என்றால், மக்கள் ஆற்றல் அவர்கள் பக்கம் திரண்டு நிற்கும் என்பது உறுதி.

தொழிலாளர்க்கு எப்படிப்பட்ட ஆக்க நிலைகள் ஏற்படவேண்டும் என்று நாம் விரும்புகிறோமோ அவைகள் நாள்தோறும் நாடுதோறும் சிறிதுசிறிதாக நிறைவேறிவருகின்றன. உழைப்பாளர்களின் உழைக்கும் நேரம், பல போராட்டங்களுக்குப் பிறகு உலகெங்கும் பல நாடுகளிலும் குறைக்கப்பட்டு வருகின்றது. மனிதன் பதினைந்து மணிநேரம், பதினாறுமணிநேரம் உழைக்கவேண்டும் என்னும் கொடுஞ் சட்டம் ஒருகாலத்தில் நடைமுறையில் இருந்துவந்தது. இப்பொழுது, உரிமைப் போர்கள் பல நடத்தியானபிறகு, உழைக்கும் நேரம் பத்துமணி அளவுக்கு, எட்டுமணி அளவுக்கு, குறைக்கப்பட்டுவிட்டது. இன்னும் குறைக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையும், குறைப்பதற்கான முயற்சியும் ஆங்காங்கு இருந்துவருகின்றன.

தொழிலாளர்களின் நிலைமையை தொடர்ந்து உற்றுநோக்கி வந்தால், அது உறுதியான முன்னேற்றத்தை அடைந்திருப்பதை நாம் தெளிவாக உணர்ந்துகொள்ளலாம். தொழி

மழை செய்த உதவி

[எழினி]

காதலன் பொருள்திரட்டும் பொருட்டு வெளியூருக்கு வந்திருக்கிறன். தன் கடமையை நிறைவேற்றுவதில் மிக மும்முரமாக ஈடுபட்டிருக்கிறன். கோடைகாலம் மறைந்து குளிர்காலம் நெருங்குவதற்கான அறிகுறிகள் இயற்கையில் தென்படுவதைக் காண்கிறன். காதலியைப் பற்றிய நினைவு அலைகள் அவன் உள்ளத்தில் எழும்புகின்றன. "மழைகாலம் வருவதற்குள் நான் வந்து சேர்ந்துவிடுவேன்! நீ அஞ்சாதே!" என்று காதலியிடத்தில் கூறி விட்டுவந்த வாக்குறுதி அவன் நினைவிற்கு வருகின்றது. உடனே தன் பயணத்தை விரைவுபடுத்துகிறன். முதல் மழை பெய்வதற்குள்ளாக இல்லம் போய்ச் சேர்ந்துவிட வேண்டும் என்ற எண்ணத்தால், தலைவிமீது கொண்டிருக்கும் அன்பு அவனைப் பிடரிபிடித்துத்தள்ள காதலியைக் காண ஓடோடியும் வருகிறன்.

காதலன் வரவை மிக ஆவலோடும் கவலையோடும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் காதலி, காதலன் குறித்த நேரத்தில் வருவதைக் கண்டு, அளவிலா மகிழ்ச்சியை முகத்திலே தேக்கிப்,புன்சிரிப்பு காட்டிக்,கண்ணெளி வீசி, இருகை நீட்டி, அன்போடு வரவேற்று ஆரத்தழுவி நிற்கிருள்; காதலன் முத்த மழையை அவள் முகத்திலே பொழிகிறன்.

பொருள் திரட்டிவிட்டோம், குறித்த காலத்தில் வீடு திரும்பிவிட்டோம், காதலியைக் கண்டுவிட்டோம் என்ற பெருமித உணர்வோடு பெருமித மகிழ்ச்சியில் ஆழ்கிறன் தலைவன். காதலனும் காதலியும் நல இளப்பங்களைப்பற்றிய உரையாடலில் புகுந்து, சிரித்து மகிழ்ந்து பகற்பொழுதை ஒருவாறு கழிக்கின்றனர்.

இரவு வருகிறது. வானையும் நிலனையும் இருள் கப்பிக்கொள்கிறது. வானத்தில் கரு முகில்கள் அடர்ந்தெழுந்து நகர்ந்துகொண்டிருக்கின்றன. நீண்ட நாட்களாகப் பிரிந்திருந்த தலைவனும் தலைவியும், ஆராக் காதலுள்ளம் தள்ள, முயங்கும் விருப்போடு ஒருவரை ஒருவர், காந்தமும் இரும்பும்போல நெருங்குகின்றனர். அவன் அன்பால் அவளது கூந்தலைத் தடவுகிறன். நீண்டு தாழ்ந்து குழைந்து கிடக்கும் கூந்தலினைத் தடவித் தடவி அகமகிழ்கிறன். ஒளி வீசும் அவளது மாநிறமேனியைக் கண்டுகண்டு களிப்படைகிறன். அவளது உடலழகு, உடையழகு, அணிகலனழகு ஆகியவற்றை அவன் வியந்து வியந்து மகிழ்கிறன்; அவள் அந்த வியப்புக் கூற்றுக்களைக் கேட்டுக்கேட்டு மகிழ்கிருள். அவர்கள் இப்படியாக இன்பத்துறையில் ஈடுபட்டிருக்கும்போது பேரிடிகள் வானத்தில் அடுத்தடுத்து முழங்குகின்றன. இடியின் பேரொலியைத் திடீரென்று கேட்டு அஞ்சிய தலைவி, அச்சத்தைப் போக்கிக்கொள்ள தலைவனை இறுகக் கட்டியணைத்துக்கொள்கிருள்.

"ஏன் இப்படி அஞ்சுகிருய்?" என்று தலைவன் அன்போடு அவளைக் கேட்கிறன்.

"எப்படிப்பட்ட இடி பார்த்தீர்களா?

லாளர்களின் உரிமைகள் பெரும் அளவுக்கு ஆங்காங்கு மீட்கப்படுகின்றன, தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் நாளுக்குநாள் உயர்ந்துகொண்டு வருகிறது. தொழிலுக்கும் தொழிலாளர்க்கும் முழு மதிப்பு அளிக்கும் காலம் நெருங்கிக்கொண்டிருக்கிறது. தொழிலாளர்களின் உண்மை நிலைகள் வருங்காலத்தைப்பற்றி நல்ல நம்பிக்கை ஊட்டுவனவாகவே அமைந்திருக்கின்றன.

நம்முடைய ஆதரவும் இரக்கமும் வேலை செய்யும்—உழைக்கும் ஆடவர், பெண்டிர், குழந்தைகள் பக்கந்தான் இருக்கவேண்டும். ஏனென்ருல் எல்லாவற்றிற்கும் அடிப்படையாக விளங்குவது உழைப்புதான்; அதுமட்டுமல்லாமல் நாகரிகம்—வளர்ச்சி என்ற அமைப்பான—அழகான—ஒளிவீசும் கோபுரத்தைக் கட்டிக் காப்பது உழைப்பேயாகும்!

எனக்கு ஒரே அச்சமாக இருக்கிறது!'' என்று தலைவி நடுநடுங்கிய குரலில் மறுமொழி பகர்கிறாள்.

"இடிக்காக ஏன் இவ்வளவு அஞ்சுகிறாய்?''

"இடி நமது வீட்டின்மேலே விழுந்துவிடும் போலிருக்கிறதே! அம்மம்ம! எப்படித் தொடர்ந்து இடித்துக்கொண்டிருச்கிறது பாருங்கள்! உங்களுக்கு அச்சமே தோன்றவில்லையா?''

"எனக்கா? ஏன் அச்சம்? இடி முழங்குவது எனக்கு மத்தளத்தின் ஒலியைப் போலிருக்கிறது! அதுவும் மத்தளத்தின் மார்ச்சனை (மாவு) தடவப்பட்ட பக்கத்திலிருந்து எழும்பும் ஒலிபோல் இம்மென இனிமையாக இருக்கிறது!''

"ஏன் உங்களுக்கு மட்டும் அப்படித் தோன்றுகிறது?''

"அன்பே! நீ என்னை ஆரத் தழுவிக்கிடக்கும்போது இடி எனக்கு இடியாகவா இருக்கும்? மத்தளத்தின் ஒலியைப்போல இனிமையாகத்தானே இருக்கும்?''

அவள் புன்முறுவல் பூக்கிறாள்; அவன் அதிலே மூழ்குகிறான். இடிகளைத் தொடர்ந்து பெருமழை சோவென்று பெய்யத்தொடங்குகிறது. முதல் மழை பெய்வதற்கு முன்பே தாம் வந்துவிட்டோமே என்று தலைவன் உள்ளுக்குள் எண்ணி மகிழ்கிறான். மழையின் கடுமையும் குளிர்ச்சியும் அவர்கள் இருவரையும் ஒருவரையொருவர் அணைத்துக்கொண்டிருக்கும்படியான நிலைமையை இரவு முழுவதும் உண்டாக்கிவிடுகின்றன. மழையும் காற்றும் சேர்ந்து மரஞ்செடிகொடிகளின்மீது மோத, அவற்றிலுள்ள மலர்களெல்லாம் உதிர்ந்து, தலைவன் தலைவியர் படுத்திருந்த அறையின் பக்கங்களில் குவிந்தும் சிதறியும் கிடக்கின்றன. பல்வேறு மலர்களின்றும் எழும்பும் நறுமணம் அவர்களுக்கு எதிர்பாராத இன்பத்தைத் தருகின்றன. நீண்ட நாட்களுக்குப் பிறகு ஏற்படும் முதல் முயக்கம்; இடைவிடாமல் சோவென்று பெய்யும் குளிர்ச்சிதரும் மழை; நறுமணத்தைக் கமழ்ந்துகொண்டிருக்கும் பல்வகைப் பூக்கள்! இவையெல்லாம் சேர்ந்து அந்த இரவை போற்றுதற்குரிய இன்ப இரவாக மாற்றுகின்றன! அவ்விளங் காதலர்கள் இன்பந் துய்க்கின்றனர்!

மறுநாள் காலை. மழை நின்றுவிட்டது, ஆனால் முகிற் கூட்டங்கள் மட்டும் நகர்ந்துகொண்டிருக்கின்றன. தலைவன் சாளரத்தின் வழியே முகிற்கூட்டத்தை உற்றுநோக்கிக்கொண்டிருக்கிறான். தலைவன் வாழும் மனை மலைச்சாரலிலுள்ள நல்ல ஊரின்கண்ணே இருப்பதால், மலை முகடுகளிலே முகிற் கூட்டங்கள் சென்று தங்குவது நன்றாகத் தெரிகிறது.

தலைவன் எதையோ உற்று நோக்கிக்கொண்டிருப்பதைக் கண்ட தலைவி, "எதை இவ்வளவு நேரமாக உற்று நோக்கிக்கொண்டிருக்கிறீர்கள்?'' என்று வினவுகிறாள்.

"மலைமேல் சூழ்ந்துநிற்கும் மேகத்தைத் தான் பார்த்துக்கொண்டிருக்கிறேன்!'' என்று தலைவன் கூறுகிறான்.

தலைவி : "அதில் என்ன புதுமை இருக்கிறது?'' (என்று கேட்டுக்கொண்டே அவனை நெருங்கி நின்று அவளும் உற்றுப் பார்க்கிறாள்.)

தலைவன் : "புதுமை ஒன்றுமில்லை! முகிலின் தன்மையை எண்ணி வியந்து அதனை வாழ்த்திக்கொண்டிருக்கிறேன்!''

தலைவி : "அதன் தன்மையில் வியப்புக்கு என்ன இருக்கிறது?''

தலைவன் : "என்ன இருக்கிறதா? என்ன இவ்வளவு எளிதாய்க் கேட்டுவிட்டாய்? அது தரும் மழைதானே உலகத்திற்கு அச்சாணியாக விளங்குகிறது. அது ஆதாரமாக இல்லாவிட்டால் உலகமே நகராதே! உயிரினம் அனைத்தும் பட்டுப்போகுமே! அது உலகத்திற்குச் செய்யும் உதவியோடு, நமக்குமட்டும் தனியாக ஓர் உதவியைச் செய்திருக்கிறதே, தெரியுமா?''

தலைவி : "என்ன உதவியைச் செய்துவிட்டது? அது எழுப்பிய இடி எனக்கு இரவு எவ்வளவு அச்சத்தை உண்டாக்கியது தெரியுமா?

தலைவன் : (சிரித்துக்கொண்டே) "அது இடியை எழுப்பிய பிறகு மழையைப் பெய்வித்ததே, அதை நீ மறந்துவிட்டாயா?''

தலைவி : "மழை நமக்கு என்ன தனியாக நன்மையைச் செய்துவிட்டது? மரஞ்செடி கொடி பயிர் பச்சைகளுக்கு வேண்டுமானால் அதனால் நன்மையிருக்கலாம்!''

தலைவன் : "மேகம் தந்த மழையினால் ஏற்பட்ட குளிரல்லவா நாமிருவரும் இரவு முழுவதும் நெருங்கி இருக்கவும், அணைத்துக்கொள்ளவும், முயங்கிக்கிடக்கவும்

எனக்கு ஒரே அச்சமாக இருக்கிறது!'' என்று தலைவி நடுநடுங்கிய குரலில் மறுமொழி பகர்கிறாள்.

" இடிக்காக ஏன் இவ்வளவு அஞ்சுகிறாய்?''

" இடி நமது வீட்டின்மேலே விழுந்துவிடும் போலிருக்கிறதே! அம்மம்ம! எப்படித் தொடர்ந்து இடித்துக்கொண்டிருக்கிறது பாருங்கள்! உங்களுக்கு அச்சமே தோன்றவில்லையா?''

" எனக்கா? ஏன் அச்சம்? இடி முழங்குவது எனக்கு மத்தளத்தின் ஒலியைப் போலிருக்கிறது! அதுவும் மத்தளத்தின் மார்ச்சனை (மாவு) தடவப்பட்ட பக்கத்திலிருந்து எழும்பும் ஒலிபோல் இம்மென இனிமையாக இருக்கிறது!''

" ஏன் உங்களுக்கு மட்டும் அப்படித் தோன்றுகிறது?''

" அன்பே! நீ என்னை ஆரத் தழுவிக்கிடக்கும்போது இடி எனக்கு இடியாகவா இருக்கும்? மத்தளத்தின் ஒலியைப்போல இனிமையாகத்தானே இருக்கும்?''

அவள் புன்முறுவல் பூக்கிறாள்; அவன் அதிலே மூழ்குகிறான். இடிகளைத் தொடர்ந்து பெருமழை சோவென்று பெய்யத்தொடங்குகிறது. முதல் மழை பெய்வதற்கு முன்பே தாம் வந்துவிட்டோமே என்று தலைவன் உள்ளுக்குள் எண்ணி மகிழ்கிறான். மழையின் கடுமையும் குளிர்ச்சியும் அவர்கள் இருவரையும் ஒருவரையொருவர் அணைத்துக்கொண்டிருக்கும்படியான நிலைமையை இரவு முழுவதும் உண்டாக்கிவிடுகின்றன. மழையும் காற்றும் சேர்ந்து மரஞ்செடிகொடிகளின்மீது மோத, அவற்றிலுள்ள மலர்களெல்லாம் உதிர்ந்து, தலைவன் தலைவியர் படுத்திருந்த அறையின் பக்கங்களில் குவிந்தும் சிதறியும் கிடக்கின்றன. பல்வேறு மலர்களின்றும் எழும்பும் நறுமணம் அவர்களுக்கு எதிர்பாராத இன்பத்தைத் தருகின்றன. நீண்ட நாட்களுக்குப் பிறகு ஏற்படும் முதல் முயக்கம்; இடைவிடாமல் சோவென்று பெய்யும் குளிர்ச்சிதரும் மழை; நறுமணத்தைக் கமழ்ந்துகொண்டிருக்கும் பல்வகைப் பூக்கள்! இவையெல்லாம் சேர்ந்து அந்த இரவை போற்றுதற்குரிய இன்ப இரவாக மாற்றுகின்றன! அவ்விளங் காதலர்கள் இன்பந் துய்க்கின்றனர்!

மறுநாள் காலை. மழை நின்றுவிட்டது, ஆனால் முகிற் கூட்டங்கள் மட்டும் நகர்ந்துகொண்டிருக்கின்றன. தலைவன் சாளரத்தின் வழியே முகிற்கூட்டத்தை உற்றுநோக்கிக் கொண்டிருக்கிறான். தலைவன் வாழும் மனை மலைச்சாரலிலுள்ள நல்ல ஊரின்கண்ணே இருப்பதால், மலை முகடுகளிலே முகிற் கூட்டங்கள் சென்று தங்குவது நன்றாகத் தெரிகிறது.

தலைவன் எதையோ உற்று நோக்கிக்கொண்டிருப்பதைக் கண்ட தலைவி, " எதை இவ்வளவு நேரமாக உற்று நோக்கிக்கொண்டிருக்கிறீர்கள்?'' என்று வினவுகிறாள்.

" மலைமேல் சூழ்ந்துநிற்கும் மேகத்தைத் தான் பார்த்துக்கொண்டிருக்கிறேன்!'' என்று தலைவன் கூறுகிறான்.

தலைவி : " அதில் என்ன புதுமை இருக்கிறது?'' (என்று கேட்டுக்கொண்டே அவனை நெருங்கி நின்று அவளும் உற்றுப் பார்க்கிறாள்.)

தலைவன் : " புதுமை ஒன்றுமில்லை! முகிலின் தன்மையை எண்ணி வியந்து அதனை வாழ்த்திக்கொண்டிருக்கிறேன்!''

தலைவி : " அதன் தன்மையில் வியப்புக்கு என்ன இருக்கிறது?''

தலைவன் : " என்ன இருக்கிறதா? என்ன இவ்வளவு எளிதாய்க் கேட்டுவிட்டாய்? அது தரும் மழைதானே உலகத்திற்கு அச்சாணியாக விளங்குகிறது. அது ஆதாரமாக இல்லாவிட்டால் உலகமே நகராதே! உயிரினம் அனைத்தும் பட்டுப்போகுமே! அது உலகத்திற்குச் செய்யும் உதவியோடு, நமக்குமட்டும் தனியாக ஓர் உதவியைச் செய்திருக்கிறதே, தெரியுமா?''

தலைவி : " என்ன உதவியைச் செய்துவிட்டது? அது எழுப்பிய இடி எனக்கு இரவு எவ்வளவு அச்சத்தை உண்டாக்கியது தெரியுமா?

தலைவன் : (சிரித்துக்கொண்டே) " அது இடியை எழுப்பிய பிறகு மழையைப் பெய்வித்ததே, அதை நீ மறந்துவிட்டாயா?''

தலைவி : " மழை நமக்கு என்ன தனியாக நன்மையைச் செய்துவிட்டது? மரஞ்செடி கொடி பயிர் பச்சைகளுக்கு வேண்டுமானால் அதனால் நன்மையிருக்கலாம்!''

தலைவன் : " மேகம் தந்த மழையினால் ஏற்பட்ட குளிரல்லவா நாமிருவரும் இரவு முழுவதும் நெருங்கி இருக்கவும், அணைத்துக்கொள்ளவும், முயங்கிக்கிடக்கவும்

வினாவும் விளக்கமும்

‘மதத்’தைப் பற்றித் திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டுள்ள கருத்து என்ன ?

தீமை—தொல்லை—துன்பம் — கொடுமை—கொள்ளை—கொலை—களவு—சூது—சூழ்ச்சி — வஞ்சகம்—பொய்— பொறாமை — அறியாமை போன்ற வேண்டப்படாத இன்னபிறவெல்லாம் அற்ற ஒரு சமுதாய அமைப்பை, அன்பால் இணைந்து அறிவால் வளர்ந்து அருளைப் பரப்பிவருவதாக அமைந்த ஒரு சமுதாய அமைப்பை, மகிழ்ச்சியைப் பெருக்கி இடையீடில்லாத இன்பத்தை நுகருவதாக அமைந்த ஒரு சமுதாய அமைப்பை முதலில் திராவிட நாட்டில், பிறகு உலகில், காணுவதை இறுதிக் குறிக்கோளாகக் கொண்டுதான், திராவிட முன்னேற்றக் கழகம் சமுதாயத்துறையில் பாடுபட்டுவருகிறது. இந்தக் குறிக்கோளை நிறைவேற்ற நம்பிக்கை அடிப்படையில் அமைந்த ‘பக்தி’ நெறியைவிட அறிவியல் அடிப்படையில் அமைந்த ‘பகுத்தறிவு’நெறியே ஏற்றதும், சிறந்ததும், பயன்தருவதும், உறுதியானதும் ஆகும் என்று கழகம் கருதுகிறது.

இன்றைய உலகியல்நடைமுறையில் மத அமைப்பு அவசியமில்லை ; காலத்திற்கும் கருத்திற்கும் ஏற்றவாறு நல்லன தீயன ஆராய்ந்து, தீயன அகற்றி, நல்லன மேற்கொள்ளும் பகுத்தறிவு நெறியே அவசியமானதாகும்.

உலகில்—நாட்டில் பல்வேறுவகையான பலப்பல மதங்கள் இருக்கின்றன. பொதுவாக எல்லா மதங்களையும் கூர்ந்து கவனிக்கும் போது, இயற்கைக்கு மீறிய ஆற்றல் ஒன்றோ அல்லது பலவோ உண்டு என்பதை நம்பியும், அந்த ஒன்றிற்கோ அல்லது பலவற்றிற்கோ பண்புகளும் — ஆற்றல்களும் — நடவடிக்கைகளும் உண்டு என்பதை ஏற்றும், அந்த ஒன்

ஓசையோடு பெய்யும் மழையை உடையையாகி, இவ்வுலகத்துக்கோர் ஆதாரமாக யாவரும் தொழும் வண்ணம் ஆங்காங்குள்ள நிலைத்துநிற்கும் பலவாகிய மலையின் கொடுமுடிகள் தோறும் பொருந்தியிருந்து உலாவுவாயாக! சலி - ஓசை; எழிலி - மேகம் ; உரை இயர் - உலாவுக ; வடி நரம்பு - முறுக்கப்பட்ட நரம்பு ; முழவு - மத்தளம்; வணர்தல் - நுனி சுருண்டிருத்தல்.]

மழை பெய்யும்போது ஏற்படும் குளிர்ச்சியினால் காதலன் காதலியர் அணைந்துகிடக்கும் இயல்பினை புலவர் இச்செய்யுளின் மூலம் சுட்டிக்காட்டும் பண்பு மிகமிகப் போற்றுதற்குரியதாகும்.

தான் காதலியிடம் இன்பத்தை இனிது நுகர்தற்கு மழை காரணமாக இருத்தலால் தலைவன் அதனை வாழ்த்துகிறான். உதவி செய்த ஒருவரை வாழ்த்துதலும், அவருக்கு யறிவுடையவராக நடந்துகொள்ளுதலும் பண்டைத் தமிழர் போற்றிவந்த சிறந்த பண்பாதலால், அதற்கு ஏற்ப தலைவன் மழைக்கு வாழ்த்து கூறுகிறான். வாழ்த்துதலுக்கும் போற்றுதலுக்கும் உரியஒன்றைஉயர்ந்ததோர் இடத்தில் வைத்து வழிபடுவது மரபாதலின், உயர்ந்து விளங்கும் கொடுமுடிகள் தோறும் உலாவுவாயாக என்று மேகத்தைப் பார்த்துக் கூறுகிறான்.

தலைவியோடு கூடியிருக்கும்போது தலைவனுக்கு எல்லாம் இன்பமயமாகத்தான் காட்சியளிக்கும் என்பது, அவன் இடியின் ஒலியை மத்தளத்தின் ஒலியைப்போல நுகரும் மனப்பாங்கினால் இனிது அறிந்துகொள்ளலாம்.

உழுவார் உலகத்தார்க்கு அச்சாணிபோன்றவர்கள் என்றார் திருவள்ளுவர். உலகத்தாரை உழுவார் தாங்கி வருதலால் அவ்வாறு கூறினார். உழுவாரை உள்ளடக்கிய உலகத்தார் எல்லோரையும் மழை தாங்கிவருதலால், மழையை உலகத்திற்கு அச்சாணி என்று இச்செய்யுளில் புலவர் நயம்படக் கூறியுள்ளார். மழையைப் போற்றி வரவேற்றல் தொன்று தொட்டு இருந்துவரும் இன்றியமையாப் பழக்கமாகும்.

றிற்கோ அல்லது பலவற்றிற்கோ கீழ்ப்படிந்து வணங்கி வழிபட்டும், அந்த ஒன்றினையோ அல்லது பலவற்றையோ வாழ்த்தியும், அதற்கோ அல்லது அவற்றிற்கோ நன்றி தெரிவித்தும், அந்த ஒன்றினுடையவோ அல்லது பலவினுடையவோ கட்டளையின் காரணமாக ஏற்பட்டதாகக் கருதப்படும் சட்டதிட்ட ஒழுங்கு சம்பிரதாயச் சடங்கு முறைகளைக் கடைப்பிடித்தும் ஒழுகும், கொள்கை ஒருமனப்பாடுடைய பலரும் இணைந்திருக்கும் அமைப்பு முறையே, மதம் என்று தெளியப்பெறுகிறது.

சுருங்கக் கூறினால், மதம் **(1) 'கடவுளு'க்கும் உலகத்திற்கும் உள்ள தொடர்பு (2) 'கடவுளு'க்கும் மனிதனுக்கும் உள்ள தொடர்பு (3) மனிதனுக்கும் உலகத்திற்கும் உள்ள தொடர்பு** ஆகிய தொடர்புகளைப் பற்றிக் கவலைப்பட்டு, அவைபற்றி விளக்கிக் கூறி அவற்றிற்கான கொள்கை—சட்ட—திட்ட—செயல்முறைகளை வகுத்துக்கொண்டிருக்கிறது. ஆனால் கழகம் கடைப்பிடிக்கும் பகுத்தறிவு நெறியோ முதல் இரண்டு தொடர்புகளைப்பற்றிக் கவலைப்படாமல், அவைபற்றிக் கவலைப்படுவது தேவையற்றது என்று கருதி, மூன்றாவது தொடர்பாகிய 'மனிதனுக்கும் உலகத்திற்கும் உள்ள தொடர்பை'ப்பற்றி மட்டுமே கவலைப்படுகிறது. மதம் முன்னைய இரண்டு தொடர்புக்கு மட்டுந்தான் மிக முக்கியத்துவம் கொடுக்கிறது; ஆனால் பகுத்தறிவு நெறியோ மூன்றாவது தொடர்புக்கு மட்டுந்தான் முழு முக்கியத்துவம் கொடுக்கிறது.

இந்த மூன்று தொடர்புகளில் எந்தத் தொடர்பைப்பற்றிக் கவலைப்படுவது மனித வாழ்வுக்கு மிக இன்றியமையாதது என்றால், மூன்றாவது தொடர்புதான் என்பது கண்கூடு. முதலிரண்டு தொடர்புகளைப் பற்றிக் கவலைப்படாமலேயே பகுத்தறிவு நெறியினர் வாழ்ந்துவிட முடிகிறது—வாழ்கிறார்கள்; ஆனால் மூன்றாவது தொடர்பைப்பற்றிக் கவலைப்படாமல் மத பக்தர்கள் வாழ்ந்ததில்லை—வாழமுடிவதில்லை, அதைப்பற்றி அவர்களும் கவலைப்பட்டே தீரவேண்டியிருக்கிறது. இவற்றிலிருந்து மூன்றாவது தொடர்புதான் மனித வாழ்வுக்கு இன்றியமையாது தேவைப்படுகிற தொடர்பாகும் என்பது தெற்றென விளங்கும்.

மதம் தனது நேரம்—நினைப்பு—உழைப்பு—அறிவு—ஆற்றல் ஆகிய எல்லாவற்றையும் செலவழித்து, கடவுளுக்கும் உலகத்திற்கும் உள்ள தொடர்பைப்பற்றியும், கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள தொடர்பைப்பற்றியும் வண்டி வண்டியாகக் கொட்டிக் கருத்துக்களைப் போரெனக்குவித்திருக்கிறது. ஆனால் அந்தக் கருத்துக்களெல்லாம் அறிவியல் அடிப்படையில் வளர்ந்த பகுத்தறிவு ஆராய்ச்சியின் முன்னால் நிற்கமுடியாமல் தவிடுபொடியாகி மங்கி மறைந்தொழிகின்றன.

மனித சமுதாயம் வளம்பெற—முன்னேற—இன்ப வாழ்வு நடத்த அது முதலிரண்டு தொடர்புகளைப்பற்றிக் கவலைப்படவேண்டிய அவசியமில்லை. எனவே அவசியமில்லாத முதலிரண்டு தொடர்புகளுக்கு மிக முக்கியத்துவம் கொடுத்துவரும் மத அமைப்பும் இற்றைக்கால நிலைக்கு அவசியமில்லை என்கிறோம்.

மத அமைப்புதான் கொல்லாமை—களவாடாமை — கள்ளுண்ணாமை — பொய் சொல்லாமை—சூதாடாமை—உண்மை பேசுதல்—நீதிவழங்குதல் — நேர்மையோடிருத்தல் — நாணயமாக நடத்தல் — அன்பு காட்டல்—அருள்பயத்தல்—அறம் செய்தல்—ஒழுக்கம் நிலைநாட்டல் போன்ற இன்னபிற நற்பண்புகளை உலகில் நிலைநிறுத்தமுடியும், இல்லையானால் இந்த நற்பண்புகளெல்லாம் அடியோடு அழிந்துபோய்விடும் என்று மதபக்தர்கள் கூறுகிறார்கள். இத்தகைய நற்பண்புகளெல்லாம் பகுத்தறிவு நெறிக்கு மாறுபட்டவை என்று மதவாதிகள் தவறாகக் கருதிக்கொண்டிருக்கின்றனர். பகுத்தறிவு நெறி இத்தகைய பண்புகளை முழுக்க முழுக்க ஏற்றுக்கொள்ளவும்—கடைப்பிடிக்கவும்—பரப்பவுந்தான் செய்கிறது. இந்தப் பண்புகளையெல்லாம் பகுத்தறிந்து பார்க்கும்போது, மனித சமுதாயத்தின் இன்பவாழ்வுக்கு இவையெல்லாம் தேவை என்று படுவதால்தான், பகுத்தறிவு நெறி இவற்றையெல்லாம் ஏற்றுக்கொள்ளவும் கடைப்பிடிக்கவும் செய்கிறது. இந்தப் பண்புகளுக்கு ஒருவன் தன்னை இருப்பிடமாக்கிக்கொள்வதற்கு, அவன் இந்தப் பண்புகளிடத்தில் மிக்க அன்பு செலுத்தவேண்டியதும், இவற்றிற்கு எதிரான பண்புகளைவெறுத்தொதுக்கவேண்டியதுந்தான் முக்கியமே ஒழிய அவனுக்குக்'கடவுளு'ணர்வு அவசியமில்லையே! நற்பண்பினை ஒருவன் பெறக் 'கடவுளு'க்கு வாழ்த்துக்கூறி — வணக்கந் தெரிவித்து — பாமாலைசூட்டி — நோன்பிருந்து — படையல் போட்டு—பலியிட்டு—தூபதீப நைவேத்தியம் காட்டி—சூடம் கொளுத்தி — மெழுகுவர்த்தி ஏற்றி—சாம்பிராணி போட்டு—வேண்டுதலைச் செலுத்தி—காவடி தூக்கி—அலகு குத்திக் காட்டி—அரும்பணிகள் செய்து—தேர்திருவிழா நடத்தி — கோயில்கட்டி — குடமுழக்கு செய்து—யாத்திரை மேற்கொண்டு—காணிக்கைசெலுத்தித்தான் ஆகவேண்டும் என்ற

அவசியமில்லையே! இவைகளை யெல்லாம் செலுத்தாமலேயே பலர் நற்பண்புகளுக்கு உறைவிடமாக விளங்குகிறார்களே! இவைகளையெல்லாம் இடைவிடாமல் செய்து காட்டும் பலர் தீப்பண்புகளுக்கு இருப்பிடமாக இருக்கிறார்களே! எனவே 'கடவுளு'ணர்வுக்கும் நற்பண்புகளுக்கும் நேரடித் தொடர்பு எதுவும் இருக்கவில்லை என்பது பெறப்படுகின்றதே! 'கடவுளு'க்கு அஞ்சி, 'நரகத்'திற்கு அஞ்சி கொலைசெய்யாமல் இருப்பவர்களைவிட, கொலை செய்வது ஆகாது—மகிழ்ச்சிதராத செயல்—துன்பம் தரும் செயல்—கூட்டு வாழ்வுக்கு ஊறுபயக்கும் செயல்—அது தன்னையே திருப்பித் தாக்கினால் தாங்கமுடியாத செயல்—தான் எப்படித் தாங்கமுடியாத செயலோ அப்படியே பிறராலும் தாங்கமுடியாத செயல் என்று உணர்ந்து கொல்லாமையிடத்து அன்பு செலுத்திக் கொலை செய்யாமல் இருப்பவர்களின் எண்ணிக்கைதான் ஏராளமாகும். நாட்டில் நடக்கும் கொலைகளில் நூற்றுக்குத் தொண்ணூற்றென்பது கொலைகள் 'கடவுளு'ணர்வு—மதவுணர்வு கொண்டவர்களாலேயே தான் செய்யப்படுகின்றன என்பதிலிருந்தே மேற்கூறப்பட்ட உண்மையை உணரலாம். 'கடவுளு'ணர்வு—மதவுணர்வைவிட, மக்கள் தாமே பகுத்தறிந்து வளர்த்துக்கொள்ளும் பண்பாட்டுணர்வுதான் மனித சமுதாயத்தை வளர்த்தும் — முன்னேற்றவழியில் அழைத்தும் வருகிறது என்பது தெள்ளத் தெளிவாகும்.

இத்தகு காரணங்கள் பற்றிதான் மனித சமுதாயம் நலம்பெற மத அமைப்பு அவசியமில்லை, அறிவியல் அடிப்படையில் வளரும் பகுத்தறிவு நெறியே தேவை என்று திராவிட முன்னேற்றக் கழகம் கருதுகிறது.

மதம், குறிப்பிட்ட ஒரு பழங்காலத்தில் குறிப்பிட்ட ஒரு சூழ்நிலையில் நிலவிய கருத்துக்களைச் சட்டதிட்டமாக்கிக்கொண்டு, அவற்றைச் சிறிதும் மாற்றிக்கொள்ளவோ அல்லது விட்டுக்கொடுக்கவோ மனமில்லாமல் விடாப்பிடியாய்ப் பிடித்துக்கொண்டு, அவற்றைத், தொடர்ந்து வருங்காலத்திலும் வற்புறுத்தும் போதுதான், அவை காலத்திற்கும் கருத்திற்கும் ஒத்துவருவன அல்ல, அவை குருட்டு நம்பிக்கைகளாகவும், மூடப்பழக்க வழக்கங்களாகவும் கருதவேண்டியனவாக இருக்கின்றன என்று ஒதுக்கித்தள்ளவேண்டியவர்களாக இருக்கிறோம். ஆனால் பகுத்தறிவுநெறி என்பதோ அறிவியல் அடிப்படையில், காலத்திற்கும் கருத்திற்கும் ஏற்ப, நல்லன—தீயன, தேவையுள்ளன—தேவையற்றன் ஆகியவற்றை ஆராய்ந்து தீயன தேவையற்றன ஆகியவற்றை விலக்கி, நல்லன தேவையுள்ளன ஆகியவற்றை ஏற்கும் நெறியாகும். எனவேதான் திராவிட முன்னேற்றக் கழகம் மதங்களை ஒதுக்கிப் பகுத்தறிவு நெறியைப் பின்பற்றுகிறது.

கழகம், அமைதியான முறையில்தான் எப்பொழுதும் பகுத்தறிவு நெறியைப் பரப்பி வரும்; அமைதியான முறையில்தான் மதவுணர்வு படைத்தோர்க்குத் தெளிவுரை பயந்து அவர்களைப் பகுத்தறிவு நெறியில் திருப்பிவிட பாடுபடும். கழகம், மதக்கொள்கைகளில் பெரும்பாலானவை, எப்படிக் காலத்திற்கும் கருத்திற்கும் பொருந்திவராதனவாகும் என்பதைக் காரணகாரிய விளக்கத்தோடு தெளிவுபடுத்திக் காட்டும்; பகுத்தறிவு நெறியைக் கூறும்; பொதுமக்களைச் சிந்திக்கச் சொல்லும்; தெளிவுபெறச் சொல்லும்; ஆனால் வலுவாதிக்கமாக (பலாத்காரமாக) மதவுணர்வாளர்களிடத்தில் பகுத்தறிவு நெறியைத் திணிக்க ஒருபோதும் முயலாது. ●

எவரெச்ட் மலைமுகட்டின் உயரம் 29028 அடி

எவரெச்ட் மலைமுகட்டின் உயரம் இதுவரையில் 29002 அடி என்றுதான் பள்ளிக்கூடங்களில் நிலநூல் வகுப்புகளில் சொல்லிக்கொடுக்கப்பட்டு வந்தது. இது 1854-ம் ஆண்டில் நில அளவையாளர்கள், இந்திய அரசாங்க நில அளவைப் பெருந்தலைவராக (சர்வே ஜெனரல்) விளங்கிய சர் ஆண்டுருவாக் தலைமையில் அளந்துபார்த்துக் கூறிய கணக்காகும். இப்பொழுது 1954-ல் மீண்டும் சரியாக எடுத்த கணக்குப்படி எவரெச்ட் மலை முகட்டின் உயரம் 29028 அடி என்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

முகவரி மாற்றம்

எஸ். எஸ். பி. லிங்கம்,

82, மெயின் ரோடு,

ராஜா அண்ணாமலைபுரம்,

சென்னை-28.

பகுத் பிரச்சை

[பரணன்]

1656-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 17-ம் நாள்! ஆம்ஸ்டர்டாம் (Amsterdam) நகரின் யூதர் கோயிலிலுள்ள தொழுகை மண்டபம்! அன்று அது தொழுகை மண்டபமாகக் காட்சி யளிக்கவில்லை; நீதி மன்றமாக மாற்றப்பட்டிருந்தது! அடாத வழக்கு ஒன்றை அவசரமாக ஆய்தற்பொருட்டே யூத சமயத்தவரின் நீதி மன்றம் அங்கு கூட்டப்பெற்றிருந்தது!

யூத சமயத்தைக் கட்டிக்காத்து வளர்த்து வந்த சமயத்தலைவர்களும், கோயில் குருக்களும், புரோகிதர்களும், வயதுமுதிர்ந்த பெரியவர்களும் சினம்பொங்க, கண்சிவக்க, ஆத்திரத்தோடு அமர்ந்திருந்தனர். அவர்கள் முகங்கள் எள்ளும் கொள்ளும் வெடித்தாற்போன்று கடுகடுத்துக் காணப்பட்டன. அவர்களுக்கிடையில் ஒரு இளைஞன் பிடித்துத் தள்ளிக் கொண்டுவந்து நிறுத்தப்பட்டான். சூழ்ந்திருந்த மதத்தலைவர்களின் முறைப்பான பார்வை அவனைக் கொன்றுவிடுவதுபோலிருந்தது.

யூத சமயக்கடவுளைப் பழித்தான், யூத சமயக் கருத்துக்களை மறுத்தான், யூத சமயச் சட்டதிட்டங்களை இழித்துரைத்தான், யூதக் கடவுள் தொழுகையை மறந்தான் என்பன போன்ற குற்றச்சாட்டுகளின் உண்மையை ஆய்ந்தறிதற்பொருட்டே அவ்விளைஞன் அங்கு அழைத்துவரப்பட்டான். அவன் மீதுள்ள குற்றச்சாட்டுகளை எடுத்துச் சொல்ல, இரு இளைஞர்கள், எதிர்புறத்தில், அவன் முன்னால் வந்து நின்றனர். அவர்கள் வேறு யாருமில்லை, அந்த இளைஞனோடு பல நாள் பழகிய நண்பர்களே. சுற்றிலும் நடைபெற்ற நிகழ்ச்சிகள் அந்த இளைஞனுக்கு வியப்பையும் வேடிக்கையையும் மட்டுமே தந்தன.

"இவன் அண்டமே கடவுள் என்கிறான், அதிலுள்ள ஞாயிறு, திங்கள், உடுக்கள், உலகம் போன்ற எல்லாம் கடவுளின் உடல் என்றான், அண்டத்தில் காணப்படும் ஆற்றலே அக்கடவுளின் உள்ளம் என்கிறான், யூதர்களுக்கு இயற்கைவியல் (Physics) அறிவும், கொள்கைவியல் (Theology) அறிவும் இல்லை என்கிறான், யூதசமயச்சட்டம் நெறிமுறையற்றவர்களால் செய்யப்பட்டது என்கிறான்" என்பனபோன்ற குற்றச்சாட்டுகளை அந்த இரு இளைஞர்களும் ஒன்றன்பின் ஒன்றாக அடுக்கினார்கள். குற்றத்திற்குள்ளாக்கப்பட்ட இளைஞன், தன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளில் எதையும் மறுக்கவில்லை; எல்லாவற்றையுமே ஏற்றுக்கொண்டான். அவன் அவையெல்லாம் 'குற்றங்கள்' அல்ல, 'உண்மைகள்' என்று வாதிட்டு நின்றான்.

யூத சமூகத்தில் இப்படிப்பட்ட ஒரு இளைஞன் சமயத்திற்கு மாறுபட்ட தன்மையுடையவனாக இருக்கக்கூடாது, அவன் மதவிலக்கு செய்யப்படவேண்டும் என்று கூடியிருந்தோர் அனைவரும் எண்ணினர். அவனது மனப்போக்கை மாற்றிப் பார்க்கலாம் என்று கருதி, அவனுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2500 தருவதாகவும், அதற்குப் பதிலாக அவன் சமயத்திற்கு மாறுபட்டக் கருத்து ஏதும் வெளியிடாமல் அடிக்கடி கோயிலுக்கு வந்து செல்ல வேண்டும் என்றும் கூறிப்பார்த்தார்கள். அவன் பணத்தை ஏற்றுக்கொள்ளவோ அதற்காகக் கருத்தை மாற்றிக்கொள்ளவோ மறுத்தான். உடனே அங்குக் கூடியிருந்த மதத்தலைவர்கள் அந்த இளைஞனை மதவிலக்குச்செய்து தீர்ப்புக்கூறினார்கள். மதக்குருமார்களால் அவனுக்கு ஆண்டவன் பேரால் 'சாபமும்' அளிக்கப்பட்டது. அதோடு மட்டுமல்லாமல் "அவனோடு யூதசமயத்தைச் சேர்ந்த யாரும் எழுத்தின்மூலமோ அல்லது பேச்சின் மூலமோ வாணிகத்தொடர்பு வைத்துக்கொள்ளக்கூடாது; அவன் நுழையும் வீட்டில் யாரும் அவனோடு சேர்ந்து நுழையக்கூடாது; அவன் வாழும் இடத்தில் யாரும் வாழக்கூடாது; அவன் அருகே ஆறடிக்குள்ளாக யாரும் போகக்கூடாது; அவனுக்கு யாரும் உதவிசெய்யக்கூடாது; அவன் எழுதியதை யாரும் படிக்கக்கூடாது; அவன் சொல்லை அதனை யாரும் எழுதக்கூடாது" என்பன போன்ற கட்டளைகளை யூத சமயப் பெரியவர்கள் பிறப்பித்தார்கள். இந்தக் கட்டளைகள் பிறப்பிக்கப்படுவதற்கு முன்பே அவ்விளைஞன்

ஆம்ச்டர்டாம் நகரை விட்டு வெளியேற முடிவு செய்துவிட்டான். 'சாபம்' அவனைத் தீண்டுவதற்குமுன் அவனைக் கத்தியால் கொன்றுபோட்டால் என்ன என்று கருதிய வெறிபிடித்த யூதன் ஒருவன் அவ்விளைஞன் வெளியேறும்போது அவன்மீது கத்தியை வீசினான். அது அவ்விளைஞன் மேலே போர்த்தியிருந்த போர்வையைக் கிழித்துக்கொண்டுபோயிற்று. பாழ்பட்ட பழம் மதக்கொள்கைகளைத் தான் தாக்காமல் போனால், அது உண்மைக்கு மாறுபாடு இழைத்த செயலாகும் என்று உண்மையுலகை நோக்கிப் புறப்பட்டான். பொய்யர்கள் தம் பொய்மையுலகிலிருந்து அவனைத் துரத்தியடித்தனர்; ஆனால் மெய்யறிவு (தத்துவ ஞானம்—Philosophy)த்துறை அவனை ஆரத் தழுவிக்கொண்டது. இளைஞன் ஆம்ச்டர்டாம் நகரை அடுத்த சிற்றூர் ஒன்றினை நோக்கிப் புறப்பட்டான். அப்பொழுது அவனுக்கு வயது இருபத்திநான்குதான்!

அந்த இளைஞன் வேறுயாருமில்லை, பிற்காலத்தில் பெரும்புகழ்பெற்ற மெய்யறிவராக (தத்துவஞானி)த்தோற்றமளித்த **பரூக் பினோசா (Baruch Spinoza)** ஆவார்.

பினோசா *1632*-ம் ஆண்டில் ஆம்ச்டர்டாம் நகரில் ஒரு யூத வணிகருக்குப் பிள்ளையாகப் பிறந்தார். தந்தையார் தம் மகனை வணிகத் துறையில் வளமாக வாழவைக்கவேண்டும் என்று கருதினர். ஆனால் பினோசா வரட்சி தரும் மெய்யறிவுத்துறையைத்தான் நாடினர். இளைஞராக இருக்கும்போது **ஊரியல் அகாச்டா (Uriel Acosta)** என்ற யூதப் பெருமகனரின் கல்லறை பினோசாவின் உள்ளத்தில் பெருமளவுக்குக் கிளர்ச்சியை உண்டாக்கியது. ஊரியல் அகாச்டா மதத்திற்கு மாறுபாடான கருத்துக்களை வெளியிட்டுப், பொதுமக்களின் வெறுப்புக்கு ஆளாகித், தற்கொலை செய்துகொள்ளும் அளவுக்குத் துரத்தியடிக்கப்பட்டவர் ஆவார். மக்கள் கருத்து வேறுபாடு கொள்வதற்குக் காரணமாக இருப்பது எது, அதற்காக ஒருவரையொருவர் கொலை செய்துகொள்வானேன் என்று பினோசா சிந்திக்கத்தொடங்கினர்; கருத்து ஆராய்ச்சித்துறையில் இறங்கினர். கிருத்துவ மறைநூலான பைபிள், யூதர்களின் மறைநூலான **டால்முட் (Talmud)**, இலக்கியங்கள், அறிவியல் நூல்கள், பீலோ, பிளேட்டோ, அரிசுடாட்டில், எபிக்யூரசு, சியார்டனோ புருனோ, டெச்கார்டீசு போன்ற மெய்யறிவர்களின் நூல்கள் ஆகியவற்றைத் துருவித் துருவி ஆராயத்தொடங்கினர். அக்காலத்தில் இலத்தீன் மொழிப் பேராசிரியராகவும் பகுத்தறிவுவாதியாகவும் விளங்கிய **வான் டென் என்டே (Van Den Ende)** என்பவரிடம் இலத்தீன் மொழிபயின்றார்.

வான்டென் என்டேய்க்கு மகள் ஒருத்தி இருந்தாள். அவள் தன் தந்தையாருக்கு உதவியாக மாணவர்களுக்குக் கல்வி பயிற்றுவித்து வந்தாள். அவள் பினோசாவுக்குக் கல்வியோடு காதலையும் பயிற்றுவித்தாள். பினோசா அவளிடம் காதல் மயக்கம் கொண்டார். பினோசா ஒரு யூதர் அதோடு அவர் ஒரு ஏழை என்ற காரணத்தால் அவள் பினோசாவின் கையைப் பிடிக்காமல் வேறோர் பணக்காரனின் கையைப்பிடித்தாள். பினோசா காதலுலகில் தோல்வி கண்டவுடன் மெய்யறிவுத்துறையிலே தம் கவனம் முழுவதையும் செலுத்தினர். யூதசமயக் கடவுளைப் பற்றியும், சமயக்கருத்துக்களைப்பற்றியும் பினோசா தம் கருத்தைத் தாம் எண்ணியவாறு வெளியிடத் தொடங்கினர். இந்தச் சமயத்தில்தான் யூத சமயத் தலைவர்கள் பினோசாவை ஊரைவிட்டுத் துரத்தியதாகும்.

மதவிலக்குச் செய்தபிறகு பினோசாவின் தந்தையார் அவரை வெறுத்தொதுக்கினர். தந்தையார் இறந்தவுடன் பினோசாவின் உடன்பிறந்தவள் சொத்துக்களையெல்லாம் தாமே அகப்படுத்திக்கொள்ள முயன்றாள். பினோசா நீதிமன்றத்தில் வழக்குத்தொடுத்து வெற்றிபெற்றுத் தம் சொத்துக்களை மீட்டார். ஆனால் உடனே அவற்றையெல்லாம் தம் உடன்பிறந்தாளிடமே கொடுத்துவிட்டார். நீதியை நிலைநாட்டவேண்டுமென்பது அவரது குறிக்கோளாக இருந்ததால், நீதியை நிலைநாட்டிய பிறகு சொத்தைப் பற்றிக் கவலைப்படவில்லை. அவர் உண்மைக்குப் பரிந்து பேசும் பெருந்தன்மையை அந்த அளவுக்குக் கொண்டிருந்தார்.

பினோசா ஆம்ச்டர்டாமை விட்டு அகன்றதற்குப்பிறகு ஒரு சிற்றூரில் கண்ணாடி வில்லைகளைத் தேய்க்கும் தொழிலை வாழ்க்கைத் தொழிலாக ஏற்றுக்கொண்டார். 'அருளப்பட்டவர்' என்ற பொருளைத்தரும் 'பரூக்' என்ற தம்முடைய ஈப்ரு மொழிப்பெயரை, அதே பொருள் கொடுக்கும் 'பெனிடிக்ட்' என்னும் இலத்தீன் மொழிப்பெயராக மாற்றிக்கொண்டார். அவர்தம் வாழ்க்கைத் தொழிலைப் பார்த்துக்கொண்டே ஓய்வு ஏற்படும் நேரத்திலெல்லாம் கடவுளைப்பற்றியும், மனித வாழ்க்கையைப்பற்றியும் ஆராய்ச்சிச் சிந்தனையில் ஈடுபட்டிருந்தார்.

பிஞேசா தமது இருபத்தெட்டாவது வயதில் அவரை ஆதரித்துவந்த வீட்டாரோடு லெய்டன் என்ற நகரத்திற்கு அருகிலுள்ள ரீன்ஸ்பர்க் (Rhyns-burg) என்ற ஊரில் போய்த் தங்கினுர். இங்கு அவர் தம்மை ஒரு அறையில் அடக்கிக்கொண்டு, மிகவான நேரத்தை ஆராய்ச்சிக்கே செலவழித்தார். உலாவவும், உணவு உட்கொள்ளவும் சிறிது நேரம் வெளியே போவதைத்தவிர, மிகுதிநேரமெல்லாம் அவர் அந்த அறையிலேயே அடைபட்டிருந்தார். அறையின் மூலையிலே சிலந்திகள் வலை பின்னுவதும், வலையில் விழும் பூச்சிகளை அவைகள் பிடித்துத்தின்னுவதும், அவைகள் ஒன்ருெடொன்று போரிட்டுக் கொள்வதும், ஒன்றன் வலையை மற்ருென்று அழிப்பதும் ஆன காட்சிகள் பிஞேசாவின் உள்ளத்தைப் பெரிதும் ஈர்த்தன. அவர் அவற்றை உற்றுப் பார்த்துக்கொண்டே தம் சிந்தனைக்கு வேலைகொடுத்தார். சிலந்திகள் வலையைப் பின்னப்பின்ன, பிஞேசா மெய்யறிவு பற்றிய கருத்து வலையைத் தம் உள்ளத்திலே பின்னிக்கொண்டிருந்தார். ஏறத்தாழ அவர் ஒரு கூட்டுக்குள் அடைபட்டுக்கிடக்கும் புழுவைப்போல் அறையிலேயே அடைந்துகிடந்தார். பிஞேசாவுக்கு எப்பொழுதேனும் சினம் பொங்கும் என்ருல், வீட்டுக்காரி வீட்டைப் பெருக்கிக்கொண்டுவரும்போது சிலந்திவலைகளைக் கலைத்து அழித்துவிடுவாளேயானுல், அப்பொழுதுதான் ஏற்படும். சிலந்தி வலை பிஞேசாவின் சிந்தனைக்கு வேலைதரும் கருவியாக இருந்துவந்தது !

பிஞேசா **(1) நாம் வாழும் உலகம் எப்படிப்பட்டது? (2) நம்மை யார் இங்கு வாழவைத்தது? (3) நாம் ஏன் இங்கு வாழவேண்டும்?** என்ற கேள்விகளுக்கு விடை காண முற்பட்டார். நீடு சிந்தித்துச் சிலபல முடிவுகளுக்குவந்தார்.

உலகம் அதாவது அண்டம் இடத்தைப் பொறுத்து முதலும் முடிவும் அற்றது ; காலத்தைப்பொறுத்தும் முதலும் முடிவும் அற்றது. ஞாயிறு, திங்கள், உடுக்கள், கோள்கள், உலகம் எல்லாம் அண்டத்தின் ஒரு மூலையில் ஒதுங்கிக்கிடக்கும் சிறு மணிகளைப் போன்றவையாகும். அண்டத்தை நோக்க இவையெல்லாம் கண்ணுக்குத் தெரியாத சிறு அணுவைப்போன்றதாகும். அண்டம் யாராலும் உற்பத்தியாக்கப்படாதது ; யாராலும் அழிக்கப்படாதது. அது முதல்முடிவற்று இருக்கிறது. இந்த அண்டந்தான் கடவுள். அவர் எல்லாமுமாய், எங்கணுமாய், எப்பொழுதுமாய் இருப்பவர். நாம் ஒவ்வொருவரும் அக்கடவுளின் ஒவ்வொரு மிகமிகச் சிறிய பகுதியாவோம். கடவுள் எல்லாவற்றிலும் இருக்கிருர் ; எல்லாமும் கடவுளிடத்தில் இருக்கின்றன. நாம் அறியும் அண்டம் அக்கடவுளின் உடலாகும் ; அண்டத்தை இயக்குவிக்கும் ஆற்றல் அக்கடவுளின் உள்ளமாகும். இயற்கை விதிகள் அவ்வுள்ளத்திலிருந்து வெளிப்படும் கருத்துக்களாகும். கடவுள் நமக்கு அப்பாற்பட்டவரல்லர் ; நமக்கு உள்ளேயே இருப்பவர். நமது உடல் கடவுள் உடலின் ஒருபகுதி. எனவே நாம் கடவுளை அப்பாறப்பட்டவராகக் கருதி அவரை வாழ்த்தவோ, வணங்கவோ, வழிபடவோ, அவரிடம் வேண்டவோ, அவருக்குக் காணிக்கைச் செலுத்தவோ வேண்டிய அவசியமில்லை. மண்ணும், மரமும், மட்டையும், புல்லும், பூண்டும், புழுவும், நீர்வாழ்வனவும், நிலமூர்வனவும், பறவையும், விலங்கும், மனிதனும், மனமும், அணுவும், பிறவும் அவனுடைய பகுதிகளே ; எல்லாமும் சேர்ந்து அவனே. தானே சிந்தித்துக்கொண்டிருக்கும் உள்ளத்தைப்போல இயற்கைவிதிகள் அதாவது கடவுளின் எண்ணம் ஈடேறிக்கொண்டிருக்கிறது. பிறர் சொல்லிக் கேட்டு நடக்கும் உள்ளத்தைப்போல் இயற்கையின் விதிகள் அதாவது கடவுளின் உள்ளம் நடப்பதில்லை. கடவுள் தனியே உட்கார்ந்துகொண்டு எந்தப் பொருளையும் அல்லது எந்த நிகழ்ச்சியையும் கண்காணித்துக்கொண்டிருப்பதில்லை. ஏனென்ருல் எல்லாம் அவராகவே இருக்கிருர்; என்பன போன்ற கருத்துக்களை, பிஞேசா வெளியிட்டார்

இயற்கை விதிகளின் அவசியத்தையொட்டி நாம் உலகில் தோன்றியுள்ளோம் என்றும், இன்பம் நுகருவதே வாழ்க்கையின் குறிக்கோள் என்றும் தெரிவித்தார். நம்மை நாமே விரும்பக் கற்றுக்கொள்ளவேண்டும் என்றும், பிறரை விரும்பக் கற்றுக்கொண்டால்தான் அந்தப் பண்பு ஏற்படும் என்றும், மகிழ்ச்சியைப் பெற மகிழ்ச்சியைப் பிறர்க்குப் பரிமாற வேண்டும் என்றும், பொருமை பொருமையைத்தான் வளர்க்கும் என்றும் அறிவுரைகள் பல பகர்ந்தார். மனிதன் மகிழ்ச்சியோடு வாழ எப்படிப்பட்ட ஒழுக்கங்களை மேற்கொள்ள வேண்டும் என்பதைத் தெள்ளத்தெளிய விளக்கினர்.

பிஞேசா தாம் கண்ட மெய்யறிவுக் கருத்துக்களைப் பல நூல்களின் வாயிலாக எழுதி வெளியிட்டார். அவர் மிக்க எளிய ஆனல் மனநிறைவுபெற்ற வாழ்வை நடத்திவந்தார். பொருளுக்கு விருப்பப்பட்டுக் கொள்கை விற்க அவர் ஒருபோதும் ஒருப்பட்டதில்லை. ஐரோப்-

பாவிலுள்ள பல பல்கலைக்கழகங்கள் அவருக்கு அளிக்கவந்த பதவிகளை எல்லாம் அவர் உதறித்தள்ளினர்.

நண்பர்கள் சிலர் வற்புறுத்தி அழைத்த தற்கிணங்க, பினேசா யேக் (The Hague) என்ற நகரத்திற்கு வந்து சேர்ந்தார். இங்கு சைமன் டி விரீசு (Simon de Vries) என்னும் செல்வந்தர், பினேசாவுக்கு நெருங்கிய நண்பராகிப் பல உதவிகளைச் செய்ய முன்வந்தார். பினேசா பல வசதிகளை அடையும்பொருட்டு சைமன், ஒரு பெருந்தொகையை அளிக்க முன்வந்தபோது பினேசா மறுத்துவிட்டார். பின்னும் சைமன் தனது செல்வத்தை முழுதும் பினேசா பேருக்கு மாற்ற திட்டமிட்டார், இம்முறையும் பினேசா மறுத்துத் தனது உணவு வகைக்கான ஒரு சிறு தொகை மட்டும் பெற்றுக்கொண்டார். இதேபோது பிரான்சு நாட்டு மன்னன் பதினாலாம் லூயியிடமிருந்தும் ஒரு வேண்டுகோள் பினேசாவைத் தேடிவந்தது. பினேசா அடுத்து எழுதும் நூலொன்றைத் தனக்கு அன்புக் காணிக்கையாக்கவேண்டும் என்றும் அதற்காக ஒரு பெரும் பொருள் தருவதாகவும், பிரான்சு மன்னன் செய்தி அனுப்பினன். தாம் போற்ற விரும்பாத ஒருவரைச் சிறப்பிக்க இயலாது என்று கூறி மன்னனது வேண்டுகோளை நிராகரித்தார்.

கடைசியாக பினேசாவுக்கு வேறொரு வாய்ப்பும் கிடைத்தது எய்டல்பர்க் (Heidelberg) பல்கலைக்கழகத்தின் மெய்யறிவுத்துறைத் தலைவராகப் பணியாற்றும்படி பினேசாவுக்கு அழைப்பு வந்தது. ஆனல் அத்துடன், சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மத அமைப்பை மாற்றத் தூண்டும் எண்ணங்களை வெளியிடலாகாது என்ற கட்டுப்பாடும் சேர்க்கப்பட்டிருந்தது. பினேசா மனம் நிறைந்த விருப்பத்துடன் அதனை மறுத்துவிட்டார். தன் மனதில் தோன்றியக் கருத்துக்களை, உண்மைகளை எடுத்துரைக்க எவ்வகைத் துன்பங்களையும் ஏற்கும் துணிவுடன் வாழத் தலைப்பட்டார்.

பினேசா இறுதிவரையில் மணமாகாத தனி வாழ்வு நடத்தினர். யாருக்கும் அடிமைப் படாத எளிய இனிய வாழ்விலேயே இருந்து வந்தார். கண்ணடி வில்லை தேய்க்கும் தொழில் உடலைக் காப்பாற்றிக்கொள்வதற்குப் போதுமான வருவாயைத் தந்தது. அவரது உருவம் யாராலும் மதிக்கப்பெருதது; ஆனல் அவரது உள்ளம் உலகோர் என்றென்றும் போற்றக் கூடியதாக அமைந்தது.

எவ்வகைத் துன்பங்களையும் ஏற்றுக்கொள்ளும் உள்ளத்தைப் பெற்ற பினேசா, நோய்களை எதிர்த்து நிற்கும் உடலமைப்பைப்பெற முடியவில்லை. நோயுடன் போராடிய பினேசா வெற்றிபெற வழியில்லாமல் போய்விட்டது. 1677-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 22-ம் நாள், பினேசா யேக் நகரில் தனது நண்பரின் வீட்டில் இயற்கை யெய்தினர். அவர் இறுதியில் விட்டுச்சென்ற சொத்து பெரும் புகழ், சில அழியா நூல்கள், சில கண்ணடிவில்லைகள், சாப்பாட்டுக்கரண்டி தட்டு, கிழிந்த ஆடைகள் ஆகியவைதாம்!

பினேசாவின் உருவச்சிலையை 1822-ம் ஆண்டில் யேக் நகரில் அறிஞர் பெருமக்களால் நிலைநாட்டப்பட்டது. பினேசா வாழ்க்கையில் மிகமிகத் தொல்லைப்பட்டார்; ஆனல் இறுதி வரையில் உறுதியோடிருந்தார் மதவெறி கொண்டோர் செல்லுமிடங்களிலெல்லாம் அவரைத் துரத்தித் துரத்தியடித்தனர். ஒருமுறை—பலமுறை அவரைக் கொல்லுவதற்குக்கூட முயன்றனர். அவர் வாழ்நாள் முழுவதும் உறுதியோடு 'உண்மைக்காகப் பரிந்துபேசிப் பகுத்தறிவுக் கருத்துக்களைப் பரப்பி வந்தார். புதுமைக்கால மெய்யறிவர்களிலே பெரும் புகழ்பெற்ற ஒருவர் என்ற அழியாப் பெயரைப் பினேசா நிலைநாட்டி விட்டார்! வாழ்க புகழ்!

5000 ஆண்டுகளுக்குமேல் வயதானப் படகு

எகிப்து நாட்டின் நைல் நதிக்கரையில் மிகப்பெரிய பிரமிட்டாக விளங்கும் சியாப்ச் என்ற பிரமிட்டினுள் மரப்படகு ஒன்று நல்ல நிலைமையில் அப்படியே இருப்பதாகப் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளார்கள். அதன் வயது 5000 ஆண்டுகளுக்கு மேல் இருக்கும் என்று கூறப்படுகிறது. மரம் உலுத்துப்போகாமல் மிக நல்ல நிலைமையிலேயே இருப்பதாக அதனை ஆராய்ந்து பார்த்த அறிவியல் அறிஞர்கள் கூறுகிறர்கள். அந்த மரப்படகு இனிக் கெட்டுப்போகாமலிருக்கவேண்டி தைலங்கள் தடவி பிரமிட்டிலிருந்து வெளியே கொண்டுவர எண்ணப்பட்டிருக்கிறதாம்.



தையற் கலை

கே. பி. சுந்தரம், G.C.T.

கால்சட்டைக்கு

அளவு எடுக்கும் முறை

உடையின் அவவுகளை ஆதாரமாகக் கொண்டேதான், காகிதத்தின் மீதும், கம்பளி (மில்டன்) துணியின்மீதும் கோடுகள் வரைய வேண்டும். ஆகவே அளவுகளைக் கவனமாகவும், சரியாகவும், முறையோடும் எடுக்கவேண்டியது மிக முக்கியமாகும். அளவுகள் சரியான முறையில் எடுக்கப்படவில்லை என்றால், வெட்டுவதற்கும், தைப்பதற்கும் செலவிடப்பட்ட நேரம் வீணாவதோடு, பொருளும் பாழ்பட்டுவிடும்.

அளவுகளை முறையாக எடுப்பதால் உடைகளை தைத்தபின் அதில் ஏற்படும் சில, சிறு குறைபாடுகளையும் தவிர்க்கமுடியும் என்பது அனுபவத்தில் கண்ட உண்மையாகும். ஆகையால் ஆரம்பத் தொழிலாளர்கள், கவனத்தோடு முறையாக அளவுகள் எடுக்கப் பழகவேண்டும்.

மொத்தமாக உடை தயாரிப்பவர்கள், சாதாரண சராசரி உடலமைப்பு அளவைக்கொண்டு உடைகள் வெட்டித் தைக்கிறார்கள். அவை சிலருக்குப் பொருந்தியும், பலருக்குப் பொருந்தாமலும் போய்விடும். தனிப்பட்ட முறையில், வாடிக்கைக்காரர்களிடம் துணிவாங்கித் தைத்துக்கொடுக்கும் தொழிலாளர்கள், சரியான முறையில் அளவு எடுத்து, உடலுக்குப் பொருந்துமாறு தைத்துக்கொடுக்க வேண்டியவராகிறார்கள்.

அளவு எடுக்கும் முன் உடையை அணிபவர்களின் விருப்பத்தை மனதில் கொள்ளவேண்டியது மிக முக்கியமாகும். அணிபவரின் விருப்பப்படி சில அளவுகளைக் கூட்டியோ, குறைத்தோ எடுக்கவேண்டிய அவசியம் ஏற்படலாம்.

பொதுவாக உடல் அமைப்பைப் பற்றி எடுத்துக்கொண்டால் எல்லோருடைய உடல் அமைப்புகளும் ஒரே அளவில் அமைந்து இருப்பதில்லை. உதாரணமாகச் சிலர் பருத்து குட்டையாகவும், சிலர் மெலிந்து நெட்டையாகவும், சிலர் கூன் உள்ளவர்களாகவுமிருப்பதைக் காண்கின்றோம். ஏற்றத்தாழ்வு உள்ள உடல் அமைப்பைக் குறித்துப் பிறகு கவனிப்போம்.

முதலில் சராசரி உடல் அமைப்பு உள்ளவர்களின் கால்சட்டைக்கு அளவு எடுக்கும் முறையை விளக்க முற்படுகின்றேன். கால்சட்டைக்கு நீள அளவு, சுற்றளவு என இருவகைப்படும். முதலில் நீள அளவுகள் எடுக்கவேண்டும், பிறகு சுற்று அளவுகள் எடுக்கவேண்டும். அளவு கொடுப்பவருக்கு வலது பக்கத்தில் இருந்து அளவுகளை எடுப்பது நல்லது.

(1) நெடுங்கால் நீள அளவு

1-ல் இருந்து 2 வரை படத்தில் காட்டியபடி நெடுங்கால் அளவு எடுக்கவும். சிலர் கால் சட்டையை இடுப்புக்கு மேல் ஏற்றியும், இறக்கியும் அணிவது வழக்கம். ஆகையால் அளவு கொடுப்பவருக்கு எந்த இடத்தில் இடுப்புப்பட்டி நிற்கவேண்டுமோ அந்த இடத்தில் அங்குல நாடா (இஞ்சிடேப்) முனையை வைத்து நெடுங்கால் அளவு எடுக்க வேண்டும். அல்லது இயற்கையாக அமைந்துள்ள இடுப்புப் பள்ளத்திற்குமேல் $1\frac{1}{2}$ அங்குலம் உயர்த்தி (கால்சட்டையின் இடுப்புப் பட்டியின் மேல்முனையில் இருந்து) அங்குல நாடா முனையை வைத்து நெடுங்கால் அளவு தரைவரை எடுக்கவேண்டும், மிதியடி அணிந்திருந்தால் நெடுங்கால் அளவில் ஒரு அங்குலம் கழித்துவிடவும்.

(தொடரும்)



Regd. No. M 6296 MANRA

தமிழ் நாட்டில் தலை சிறந்த

வெண்சங்கு
சீயக்காய்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த
செல்வம்—ராணி ஊதுபத்திகளை
வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பாளர் வெண்சங்கு சீயக்காய்தூள் தொழிற்சாலை
3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

கருநாடக
தி. மு. க. முதல் மாநாடு

பெங்களூர் பிளாக் பள்ளி மைதான
மஜீத் பந்தலில் நடைபெறும்

சனி 1—1—55

சமூக மாநாடு

தலைவர் : காஞ்சி கல்யாணசுந்தரம்
துவக்குபவர் : ப. உ. சண்முகம்

ஞாயிறு 2—1—55

அரசியல் மாநாடு

தலைவர் : என். வி. நடராசன்
துவக்குபவர் : அருண்மொழி

இரு நாட்களிலும் அறிஞர் அண்ணா
அவர்களும் கழகச் சொற்பொழிவாளர்
பலரும் கலந்துகொள்வர்.

மதுரை மாவட்ட
தி. மு. க. 2-வது மாநாடு

மதுரை ஆரப்பாளையம் ஞான ஒளிபுரம்
சௌந்தரபாண்டியனர் பந்தலில்
நடைபெறும்

சனி 8—1—55

சமூக மாநாடு

தலைவர் : சத்தியவாணி முத்து
துவக்குபவர் : தில்லை வில்லாளன்

ஞாயிறு 9—1—55

அரசியல் மாநாடு

தலைவர் : மு. கருணாநிதி
துவக்குபவர் : எம். பி. சுப்பிரமணியம்

இரு நாட்களிலும் அறிஞர் அண்ணாவும்
பிறரும் கலந்துகொள்வர்.

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M.A.,
at MANRAM ACHAKAM at 26, Nainiappan St, Mannadi, MADRAS-1.